அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 22 | மார்ச் 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2053





# பறிபோகும் தமிழர் மரபுச் சின்னங்கள்

## பறிபோகும் கன்னியா வெந்நீரூற்று







## மத அரசியல் வேண்டாம்

## கச்சதீவில் மர்மம்

# காலமாற்றம்



வால் பிடிச்சவன்
வாய் அளக்கிறான்
வரலாறு தெரிஞ்சதாய்
காய் நகர்த்துறான் - ஆனால்
கால் இழந்தவன்
கரணம் அடிக்கிறான்!
களங்கள் கண்டதால்
மரணம் அடைகிறான்!!

ஆள் பிடிச்சவன்
கொடி பிடிக்கிறான்
அண்ணரோட நிண்டதாய்
வெடி கொழுத்துறான் - ஆனால்
தோள் கொடுத்தவன்
துவண்டு கிடக்கிறான்!
தோட்டா பாய்ந்ததால்
நோயில் படுக்கிறான்!!

வேர் அறுத்தவன்
பேர் எடுக்கிறான்
வேட்டி சட்டையில்
தேர் இழுக்கிறான் -ஆனால்
ஊர் அறிந்தவன்
உருகி அழுகிறான்!
உடலை வருத்தி
உதவி செய்யிறான்!!

குளிர் காய்ந்தவன்
குத்தி முறியிறான்
கொள்கை இதுவென்று
புத்தி சொல்கிறான்- ஆனால்
நெருப்பில் பாய்ந்தவன்
நினைப்பில் இறக்கிறான்!
பொறுப்பை காணாத
வெறுப்பில் இருக்கிறான்!!

தன்னைக் காத்தவன்
மேதையாகிறான்
தனிநாடு கோரிப்
போராளியாகிறான் - ஆனால்
மண்ணைக் காதலித்தவன்
ஏழையாகிறான்!
மௌன வலிகளால்
நோயாளியாகிறான்!!

பிறேமா (எழில்)

எழுநிலம்
EZHUNILAM

மாத இதழ் | மணம்: 22
மார்ச்

தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 05 |
| பறிபோகும் தமிழர்... | 06 |
| கச்சதீவில் மர்மம்... | 09 |
| பறிபோகும் கன்னியா... | 11 |
| ஜே.வி.பி.யின்.... | 14 |
| வாழ்வதற்காக... (கவிதை) | 17 |
| மத அரசியல்.... | 18 |
| ஆதிலிங்கேஸ்வரர் ஆலய... | 21 |
| காலத்தை வென்ற... | 23 |
| அடிமைமுறை... | 25 |
| சிதிலங்களுக்கு.... | 27 |
| கடமையே கண்ணான.... | 29 |
| சர்வதேச சமூகத்தில் ... | 31 |
| தாயுமானவள்... | 36 |





## திருக்குறள்



**குறள் 056:**

“தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.”

**விளக்க உரை:**

தன்னையும் தற்காத்து, தன்னைச் சூழ உள்ளவர்களையும் காத்து சோர்வில்லாமல் இருப்பவளே பெண்.

அட்டைப்படம் நன்று. தமிழே உன்னை வணங்குகிறேன் கவிதை நன்றாக வந்திருக்கிறது.

வெளிநாடுகளில் நடக்கும் போரட்டங்களில் ஆர்வமுள்ள எனக்கு இம்முறையும் விருந்து தந்திருக்கிறீர்கள். நன்றி ஐங்கரன் விக்னேஸ்வரா.

**-மலரவன் மகாதேவன்.**
**(லண்டன்)**

ஆசிரியர் தலையங்கத்தில் அருமையான விடயம் சொல்லியிருக்கிறீர்கள். தாயகத்தில் தட்டிக் கேட்க யாருமில்லாது என்னென்னவோ நடக்கிறது.

இளைய தலைமுறைக்கு எங்களுக்கு நடக்கும் அநியாயங்கள் பற்றிய கவலை துளியும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படித் திட்டமிட்ட வகையில் சீர்கேடுகள் அரங்கேற்றப்படுகின்றன. கொடுமை.

**-வர்ஷன்**
**(தாயகம்)**

புத்தகம் அருமை. அடுத்த புத்தகத்திற்காக ஏங்க வைக்கிறது. உங்கள் எழுத்து நடை வித்தியாசமானதாகவும் இலகுவானதாகவும் இருப்பது சிறப்பு.

தலைவர் பற்றிய பல்வேறு வகையான கதைகளுக்கு நடுநிலைமையில் நின்று நல்ல பதில் கொடுத்துள்ளீர்கள். பெண்கள் நாளையொட்டிய கவிதைகள், கட்டுரைகள் வந்தாலும் இவை போதாது என்பது என்னுடைய கருத்து.

நிறைய எழுதுங்கள். உங்கள் எழுத்துக்கள் எல்லோரையும் சென்றடைய எங்கள் வாழ்த்துகள்.

**-சியாமளன் வெங்கடரமணா**
**(பெங்களூர்)**

இம்முறை வலை நெடுங்கதை தகவல்களாக மட்டும் கடந்துவிட்டது. அடுத்த மாதத்தில் என்ன வரும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கிறோம்.

அம்மா கவிதை நன்று. யாருக்குத்தான் அம்மாவைப் பிடிக்காது? பெண்களின் தொழில் செய்யும் உரிமை கட்டுரை நன்று. இம்மாதிரியான நிலை தாயகத்திலும் சில ஆசிய நாடுகளிலும் மட்டுமே இருக்கிறது. பிற நாடுகளில் இந்த நிலைமை இல்லை.

மருத்துவக் குறிப்புகளும் தரலாமே. உபயோகமாக இருக்கும்.

**-பூவரசி சசிதரன்.**
**(நெதர்லாந்து)**




அப்பாடா..! தலைவரைப் பற்றிய வதந்திகள் ஓய்ந்தன.

சரி, பிழை என்பனவற்றைத் தாண்டி இது பற்றிய ஒரு புரளியைக் கிளப்பியதற்குப் பின்னால் உள்ளவர்களைக் கண்டறிய வேண்டும்.

ஏதோ வலுவான திட்டத்துடன் தான் தலைவரில் கை வைத்துள்ளார்கள். வழமைபோல புத்தகம் தரமாக உள்ளது. வாழ்த்துகள்.

**-ஜெனிற்றா**
**சூசைப்பிள்ளை**
**(பிரான்ஸ்)**




சிறிலங்காவின் கறுப்பு தினத்தைப் பற்றிக் கதைத்து சோர்ந்து விட்டோம். இன அழிப்பைத் தொடர்வதை நாங்கள் மறந்தாலும் அவர்கள் மறப்பதாக இல்லை. துப்பரவுப் பணியைப் பற்றி சரியாகச் சொன்னீர்கள்.

இந்த வேலை செய்பவர்களும் மனிதர்கள் தானே. கண்டபடி குப்பையை வீசுபவர்களுக்கு வெளிநாடுகளில் கொடுப்பது போல் கடுமையான தண்டனை கொடுக்க வேண்டும்.

**-ரவீந்திரா வரதன்**
**(பெல்ஜியம்)**

முல்லை பாஸ்கரின் கவிதைகளில் எப்போதும் ஒரு உயிர்ப்பு இருக்கும். நல்ல கருப்பொருளைத் தேர்ந்தெடுத்து இருக்கிறார் அவர். வாழ்த்துக்கள்.

பால்டிஸ்தான் போராட்டம் பற்றி இப்போதுதான் அறிந்திருக்கிறேன். நன்றி உங்களுக்கு.

ஆக்கிரமிப்பாளர்கள் இருக்கும் வரை பாதிக்கப்படும் மக்கள் போராடத்தான் செய்வார்கள்.

இம்முறை குட்டிக் கதைகள் குறைவாக உள்ளன. அதிகமாகப் போடலாமே.

**-மணிமாறன் சிவசம்பு**
**( சியாட்டில்)**

மிதயா கானவியின் புத்தக விமர்சனம் அருமை. இப்படியான இலக்கிய சம்பந்தமான விடயங்களை அதிகமாகப் போட முடியுமா? அட்டைப்படமும் சிறப்பு.

தனிச் சிங்களச் சட்டத்தால் நாங்கள் பட்ட பாடு கொஞ்சம் நஞ்சமல்ல. இப்போது நாட்டில் பிள்ளைகள் பொழுதுபோக சிங்களம் படிக்கிறார்கள்.

எங்கே போய்ச் சொல்லுவது?

**-பரமேஸ்வரி குடும்பத்தினர்**
**(ஜேர்மனி)**

புதுப் பொலிவுடன் உங்கள் கைகளில்...
Ezhunilam.com

# கூறு போடும் திட்டம்

## ஆசிரியர் பக்கம்

மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்களை IMF இடமிருந்து கடனுதவியாகப் பெற்ற திருப்தியில் இருக்கிறார் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இதே சந்தோசத்துடன் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லவென அடுத்த திட்டத்தையும் அறிவித்து விட்டார்.

27/03/23 அன்று இலங்கையில் 'பசுமை வலுசக்தி உச்சிமாநாடு' நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட சனாதிபதி முதலீட்டாளர்களை சந்தித்து உரையாடிய பின்னர் இந்தத் தகவலைப் பகிரங்கப் படுத்தியுள்ளார். இலங்கை இரு பிரச்சனைகளிற்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாம். ஒன்று கடன் மறுசீரமைப்பு, மற்றையது பசுமை வலுசக்தியைக் கட்டியெழுப்பி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது என்று வருங்காலத் திட்டங்களை வகைவகையாக எடுத்துவிடும் அளவிற்கு இப்போதைக்கு அவர் கையில் கடன் பணம் தாராளமாகப் புழங்குகிறது. கடன் மறுசீரமைப்பு நடைபெறுகிறது என்று அவர் கூசாமல் சொல்வதை நம்புபவர்கள் இன்னும் இருக்கிறார்கள்.

கடன் கிடைத்தவுடன் நாளாந்தப் பொருட்களின் விலைவாசியில் ஏற்பட்ட மாற்றம், அமெரிக்க டொலரின் பெறுமதியில் வீழ்ச்சி என்பன சாதாரண மக்களுக்கு உண்மையிலேயே ஒரு திருப்பம் நிகழ்வதான தோற்றப்பாட்டைக் கொடுத்திருக்கலாம். ஆனால், கையிருப்பு முடியும் வரைதான் இந்த ஆடம்பரமெல்லாம் என்பது ஆழமாக நிலைமையை சீர்தூக்கிப் பார்ப்பவர்களுக்குப் புரியும்.

IMF இடம் இலங்கை 17 தடவைகள் நிபந்தனையுடன் கூடிய கடனைப் பெற்றுள்ளது. ரணில் விக்கிரமசிங்கவின் பதவிக் காலங்களில் மட்டும் 4 தடவைகள் கடன் பெற்றுள்ளார். இந்தக் கடன்களை மீளளிக்க எந்த நடவடிக்கையும் எடாது தொடர்ந்தும் கடன்களை வாங்கிக் குவிப்பதன் விளைவு, இன்று இலங்கை 52 பில்லியன் வெளிநாட்டுக் கடனைக் கட்ட வேண்டிய கடப்பாட்டில் உள்ளது. இது நாட்டின் மொத்த உற்பத்தியில் 125.7% ஆகும். உற்பத்தியில் 71.4% கடனுக்காக செலுத்தப்படும் நிலையில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை எப்படி மேம்படுத்த முடியும்?

அதிகாரத்தில் உள்ளவர்கள் இதைப்பற்றி கிஞ்சித்தும் கவலை கொண்டதாகத் தெரியவில்லை. பாடசாலை மாணவர்களுக்காக சீருடைத் துணிக்கான 7.8 மில்லியன் ரூபாய்களுக்கு வழியற்று அரசாங்கம் தவித்தபோது, அந்தத் தொகையின் 70% சீனாவால் அன்பளிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. 5.5 மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான 88,60,990 மீற்றர்கள் சீருடைத்துணி இலவசமாகக் கிடைத்ததும், அரச பணத்தில் (கடன் வாங்கிய பணத்தில்) நாடளாவிய ரீதியில் வைபோக விழா ஏற்பாடு செய்யப்பட்டு, இந்தச் சீருடைத் துணிகள் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

வரும் ஜூன் மாதத்தினுள் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி என்பனவற்றிற்கு 2609 மில்லியன் அமெரிக்க டொலர்களை மீளச் செலுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது இலங்கை. இந்த நிலையில் அன்பளிப்பாகக் கிடைத்த துணியை, கோடிக்கணக்கான அரச பணத்தை செலவழித்து விநியோகிக்க வேண்டிய தேவை என்ன? நிதி முகாமைத்துவமோ, மறுசீரமைப்புக்கான எந்த நடவடிக்கைகளுமோ இந்த நாட்டில் இடம்பெறுவதாகத் தெரியவில்லை. அரசியலமைப்பில் சீர்திருத்தம் மேற்கொள்ள எந்த ஏற்பாடுமில்லை. தமது பதவியையும் அதிகாரத்தையும் தக்க வைப்பதற்கு மட்டும் அதிகாரத்தில் உள்ளவர்கள் படாதபாடு படுகிறார்கள். அதற்கு அரச பணத்தை விரயம் செய்கிறார்கள்.

இப்போது பசுமைப் பொருளாதாரக் கொள்கை. சூரிய சக்தி, காற்றாலைகள், உயிர் வாயு உற்பத்தி, கடல்அலை என்பனவற்றைப் பயன்படுத்தும் திறன் இலங்கைக்கு இருப்பதாகக் குறிப்பிடும் ரணில் அவர்கள் மக்களின் ஏகோபித்த ஆதரவையும் கோரியுள்ளார். இது ஒரு நீண்ட காலத் திட்டம் என்று கூறும் அவர், முதலீட்டாளர்களுக்கு சட்டபூர்வ அங்கீகாரம் அளிப்பதற்கான சட்டம் விரைவில் இயற்றப்படும் என்று கூறியதுதான் முக்கியமான விடயம்.

ஏற்கனவே, முதலீடு என்ற பெயரில் அந்நிய சக்திகளுக்கு நாட்டைத் திறந்து விட்டவர்கள் இவர்கள். குறிப்பாக, தமிழர் தாயகப் பரப்பை கூறுபோட்டு விற்பதற்கு அரசு காலத்திற்குக் காலம் பகீரதப் பிரயத்தனம் செய்வதும், அதற்கு மக்களின் எதிர்ப்பு இருப்பதும் அறிந்ததே. கடன் பணத்தில் தம்மை வளர்த்துக் கொள்ளும் இவர்கள் இப்போது சட்டத்தின் துணையுடன் நிலத்தையும் கடலையும் கூறு போட்டு விற்கத் தயாராகி விட்டார்கள். இந்த நிலை தொடருமானால் இலங்கை என்ற நாடு திவாலாவதை எவராலும் தடுக்க முடியாது.









பாரி

# பறிபோகும் தமிழர் மரபுச் சின்னங்கள்

இலங்கையின் அரசுக் கட்டில் யார் பதவிக்கு வந்தாலும், எந்தக் கட்சி அதிகாரத்தில் இருந்தாலும் தமிழர்களைக் கருவறுப்பதே தமது தலையாய பணியாகக் கொண்டு செயற்படுவர் என்பதை வரலாறு எமக்கு காலங்காலமாக உணர்த்திக் கொண்டிருக்கிறது. நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வது என்பது இரண்டாம் பட்சம்தான். காலத்துக்குக் காலம் கலவரங்களை உண்டு பண்ணி தமிழர் உயிர்களைக் காவு வாங்குவது, அவர்களின் தாயக பூமியிலிருந்து அவர்களை அடித்துத் துரத்தி அந்த இடங்களில் எல்லாம் சிங்களர்களைக் குடியேற்றுவது, தரப்படுத்தல் என்ற போர்வையில் தமிழர்களின் கல்விச் செல்வத்தை அழிப்பது என்று தொடர்ந்த தமிழின அழிப்பு, போரின் பின்னான காலத்தில் வீரியம் எடுத்துள்ளது.



விடுதலைப் புலிகளின் காலத்தில் இவ்வளவு மும்முரமாகவும், வெளிப்படையாகவும் இனக் கருவறுப்பு அரங்கேறியதுமில்லை, தமிழர் தாயகப்பரப்பில் அந்நிய சக்திகள் அபிவிருத்தி, புனர்நிர்மாணம் என்ற பெயரில் தன்னிச்சையாக வந்து குடியேறியதுமில்லை. இன்னும் சொல்லப் போனால், புலிகள் இருந்திருந்தால் சிறிலங்கா என்ற நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்காது.

தமிழனைக் கருவறுக்க வேண்டுமானால் அவனது உயிரை எடுத்தால் மட்டும் போதாது, அவனது கலாசாரத்தைச் சிதைக்க வேண்டும், அவனது பொருளாதாரக் கட்டமைப்பை ஒழிக்க வேண்டும், அவனது பூர்வீக வரலாற்றை இல்லாமற் செய்யவேண்டும், அதனைப் பிரதிபலிக்கும் அத்தனை மரபுச் சின்னங்களையும் முற்றாக நீக்க வேண்டும்.இது சிங்கள அதிகாரத்தில் உள்ளவர்களால் திட்டமிட்ட ரீதியில் தமிழர்களுக்கு எதிராக கனகச்சிதமாக நடத்தப்படும் சதித்திட்டம். வெளிப்படையாக இரத்தம் சிந்தாமல் கழுத்தறுக்கும் இத் திட்டத்தோடு இசைந்து, ஒரே சமயத்தில் தமது பௌத்த சின்னங்களை தமிழன் நிலப்பரப்பெங்கும் விதைத்து, அந்தப் பூமி சிங்களர்க்குரியதாகக் காட்ட வேண்டும். சிறிலங்கா முழுவதும் சிங்கள பௌத்த பூமி என நிறுவ வேண்டும்.

ஒரு நிலப்பரப்பு யாருடைய தாயக பூமி, அவர்கள் எவ்வளவு காலம் அந்த இடத்தில் வாழ்ந்தார்கள், அவர்களது நாகரிகப் பரம்பல் எவ்வாறு இருந்தது என்பதை ஆய்வு செய்து உண்மையை வெளிக்கொணர்வது



தொல்லியல் திணைக்களத்தின் வேலை. உலகம் முழுவதிலும் இதுதான் நியதி. தொல்லியல் திணைக்களங்கள் இன, மத, மொழி சார்ந்து இயங்குவதில்லை. உள்ளதை உள்ளபடி வெளியுலகத்தற்குக் கொண்டு வருவார்கள்.

இலங்கை இதற்கு விதிவிலக்கு. பொய்யான தகவல்களை நிறுவி, பௌத்த மதத்தினைப் பரப்பவும், தமிழர் நிலங்களை அபகரித்து சிங்களமயமாக்கும் வேலையைச் செய்யவுமென இலங்கைத் தீவின் (பௌத்த) தொல்லியல் திணைக்களம்உருவாக்கப் பட்டிருக்கிறது. அதனால்தான், தமிழின அழிப்பு, குடிப்பரம்பல் விகிதாசார வேறு பாட்டை உருவாக்குதல் போன்ற சிங்கள அரசின் முக்கிய பொறுப்பு களைத் தாங்கி, தமிழர் தாயகத்தின் மரபுச் சின்னங்களை அழிக்கும் வேலையில் முழு மூச்சாக இறங்கியுள்ளது அது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சியில் அமரும்போது, நாட்டின் சுபீட்சத் திற்கும், நல்லிணக்கத்திற்கும் பாடுபட இருப்பதாக சூழுரைத்திருந் தார். இந்தக் குறுகிய காலத்தில்.

1. திருகோணமலை ராஜவந்தான் மலைக் கோயிலில் இருந்த விக்கிரகங்கள் தோண்டி அகற்றப்பட்டு, அங்கு பௌத்த விகாரை எழுப்பப் படுகின்றது.
2. குருந்தூர்மலை ஆதி சிவன் கோவில் அழிக்கப்பட்டது. முல்லைத்தீவு நீதிமன்றின் தடையுத்தரவையும் மீறி, அங்கு விகாரை கட்டி முடிக்கப்பட்டு விட்டது.
3. நெடுந்தீவில் இருந்த வெடியரசன் கோட்டைபௌத்த தொல்லியல் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு இருக் கறது.
4. தமிழர்களின் கிரியைகள் செய்யும் இடமான கன்னியா வெந்நீரூற்று சிங்கள மயமாக்கப்பட்டு, தொல்லியல் திணைக் களம் வசம் இருக்கிறது.
5. திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைத் சூழவுள்ள பகுதிகள் அத்தனையும் சிங்களப் பகுதியாக அறிவிக்கப்பட்டு, ஆலயம் வெறுமனே 18 ஏக்கர் நிலத்தினுள் சுருக்கப்பட்டு இருக்கிறது.
6. மயிலத்தமடுப் பிரதேசம் மாதுறு ஓயா திட்டத்துன் கீழ் கொண்டு வரப்பட்டு மேய்ச்சல் தரவையாக ஆக்கப்பட்டுவிட்டது.
7. வவுனியா இராசேந்திரன் குளமும் அதைச் சூழவுள்ள பகுதிகளும் தொல்லியல் திணைக்களத்தின் அதிகாரத்தின் கீழ் வந்துள்ளது.
8. நொச்சியடி ஐயனார் கோவிலையும் சூழவுள்ள நிலத்தை யும் தொல்லியல் திணைக்களம் உரிமை கொண்டாடுகிறது.
9. நாவற்குழியில் அமைக்கப்பட்ட ஸ்ரீசமித்தி சுமண விகா ரைக்கு புதிய கலசம் அமைத்து விழாவுடன் திறந்து வைத்திருக் கிறார்கள்.
10. முல்லைத்தீவு மணற்கேணியில்அமைந்திருந்த தொன் மையான சைவக்கோவில் அழிக்கப்பட்டு இருக்கிறது.
11. தமிழர்கள் காலங்காலமாக மீன்பிடிக்கும் அவர்களின் பாரம்பரிய கடற்கரைகளை கடலட்டைப் பண்ணை அமைப்பது என்ற போர்வையில் அபகரித்து அவற்றை அந்நிய சக்திகளுக்கு தாரை வார்த்திருக்கிறார்கள்.
12. மணலாற்றில் வண்ணாமடு, கற்தூண், மணற்கேணி பகுதி நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு தொடர்ச்சியான பௌத்த மயமாக்கல் நடைபெறுகிறது.
13. நிலாவரைக் கிணற்றிற்கு அருகே திடீரென முளைத்த புத்தர் சிலை மக்களின் கொந்தளிப்பினால் (தற்காலிகமாக) காணாமல் போயுள்ளது.
14. மூதூர் கடற்கரைச் சேனையில் அமைக்கப்பட்டிருக்கும் சிங்கள கடற்படைத் தளம், சூழவுள்ள ஏக்கர்க் கணக்கான நிலத்தை கபளீகரம் செய்திருக்கிறது. தட்டிக் கேட்டவர்கள் அச்சுறுத்தப் பட்டுள்ளனர்.
15. யாழில் 70 இடங்களில் இராணுவத்திற்கென நிரந்தரமாக காணி அபகரிப்புக்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன.
16. கிழக்கில், போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில், 27 இடங்களை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயல்கின்றது.
17. யாழ் சங்கானை கலாசார மையத்தையும் தொல்லியல் ஆய்வு என்ற பெயரில் அபகரிக்க முயற்சி நடக்கிறது.
18. மட்டு நகர் வலதுகரையிலுள்ள பெரும்பாலான விளைநி லங்களை அபகரித்து மக்களை வாழ வழியில்லாமல்செய்திருக் கிறார்கள்.
19. வட்டுவாகலில் உள்ள கடற்படை முகாமைச் சூழவுள்ள காணிகள் அனைத்தையும் நிரந்தரமாகப் பறிமுதல் செய்யும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

இவை அண்மைக்கால ரணிலின் ஆட்சிக் கால நிகழ்வுகள். இவை தவிர எண்ணிலடங்கா சைவக் கோவில்கள் தொல்லியல் ஆய்வு என்ற பெயரில் கையகப்படுத்தப்பட்டு சிதைக்கப்படுவதுடன் அங்கு புத்தர் சிலையை நிர்மாணிக்கும் முயற்சிகளும் நடைபெறுகின்றன.

1. **சுழிபுரம் பறாளை முருகன் கோவில்**
2. **நெடுங்கேணி நொச்சியடி ஐயனார் கோவில்**
3. **கீரிமலை சிவன் கோவில்**
4. **வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோவில்**
5. **காங்கேசன்துறை முருகன் ஆலயம்**
6. **காங்கேசன்துறை சைவக் கோவில்**
7. **உருத்திரபுரம் சிவன் கோவில்**
8. **ஒதியமலை வைரவர் கோவில்**
9. **முள்ளியவளை குமாரபுரம் முருகன் கோவில்**



**தமிழனைக் கருவறுக்க வேண்டுமானால் அவனது உயிரை எடுத்தால் மட்டும் போதாது, அவனது கலாசாரத்தைச் சிதைக்க வேண்டும், அவனது பொருளாதாரக் கட்டமைப்பை ஒழிக்க வேண்டும், அவனது பூர்வீக வரலாற்றை இல்லாமற் செய்யவேண்டும், அதனைப் பிரதிபலிக்கும் அத்தனை மரபுச் சின்னங்களையும் முற்றாக நீக்க வேண்டும்.இது சிங்கள அதிகாரத்தில் உள்ளவர்களால் திட்டமிட்ட ரீதியில் தமிழர்களுக்கு எதிராக கனகச்சிதமாக நடத்தப்படும் சதித்திட்டம்.**







**முல்லைத்தீவு மணற்கேணியில் அமைந்திருந்த தொன்மையான சைவக்கோவில்**

10. குமுழமுனை குறிஞ்சிக் குமரன் கோவில்
11. வவுனிக்குளம் சிவபுரம் சிறீ மலைக் கோவில்
12. மயிலிட்டி போத்துக்கேயர் கோயில்
13. மன்னார் திருக்கேதீஸ்வரம் கோவில்
14. மாந்தை (கிழக்கு) பத்திரகாளி அம்மன் கோவில்
15. செம்மலை நீராவியடி பிள்ளையார் கோயில்
16. மூன்றுமுறிப்பு கண்ணகி அம்மன் கோவில்
17. சிவபுரம் சிவன் கோவில்
18. ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவில்
19. குமுழமுனை ஆஞ்சநேயர் கோவில்
20. பாண்டியன்குளம் சிவன் கோவில்
21. சிறீ சித்திர வேலாயுதன் முருகன் கோவில்
22. தென்னமரவடி கந்தசாமி கோவில்
23. புல்மோட்டை மலைக் கோயில்
24. வெடுக்குநாறி மலை ஆதிசிவனார்ஆலயம்
25. கல்லுமலைப் பிள்ளையார் கோவில்
26. திருகோணமலை கோணேசர் ஆலயம்
27. மட்டக்களப்பு தாந்தாமலைக் கோவில்
28. மட்டு கச்சக்கொடி சுவாமிமலைக் கோயில்
29. குருந்தூர் மலை ஆதி ஐயனார் கோயில்
30. கன்னியா வெந்நீரூற்று

இவை கையகப்படுத்தப்பட்ட ஒருசில கோயில்களின் விபரம். இவற்றுள் சில இடிக்கப்பட்டு விட்டன, சில விகாரைகளாக உருமாறிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பதிவில் அடங்காத எத்தனையோ கோவில்களும் கையகப்படுத்தப் பட்டிருக்கின்றன. விளைநிலங்கள் அபகரிக்கப்பட்டு மக்கள் வாழ்வாதாரத்தை இழந்திருக்கிறார்கள். கரை வலை வீசமுடியாது இந்திய ட்ரோலர்களால் பாதிப்புக்குள்ளாகி நிற்கும் எம்மக்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டிய கடற்தொழிலமைச்சர் பதவிக்காக அரசாங்கத்தின் காலைப் பிடித்துத் தொங்குகிறார்.

அந்நியர்களுக்கு வடக்குக் கடலைத் தாரைவார்க்க பேரம் பேசப்படுகிறது. உத்தியோகபூர்வ மொழியான தமிழ் காணாமற்போய் கன காலமாகிவிட்டது. பதிலுக்கு பெயர்ப்பலகைகளில் இந்தியும் சீன மொழியும் தலைவிரித்து ஆடுகின்றன. புத்தர் சிலைகள் முளைப்பதற்கு போட்டியாக இந்தியப் பின்புலத்துடன் நாங்களும் சிலை வடிப்பதாயின் எமது தாயகம் இந்திய மாநிலங்களில் ஒன்றாகத்தான் மாறும். அதை விடுத்து, மரபுச் சின்னங்களைப் பாதுகாக்க மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். காலத்தின் தேவை கருதிச் செய்யவேண்டிய விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வை பெரியவர் முதல் இளையோர் வரை ஏற்படுத்த வேண்டும். எனக்கென்ன வந்தது என்று இருப்போமேயானால், எங்கள் வளவிலும் புத்தர் சிலை முளைப்பது தவிர்க்கவியலாதது ஆகிவிடும்.





# கச்சதீவில் மர்மம்

## வெளிவந்த உண்மைகள்!

கச்சதீவில் மர்மமான முறையில் கடற்படையினரால் பாரிய பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டு, இரகசியமான முறையில் பௌத்தமயமாக்கல் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தற்போது பகிரங்கப்படுத்தப் பட்டுள்ளது.

கச்சதீவு இலங்கை, இந்திய பக்தர்கள் வருடம் தோறும் ஒன்று கூடி அந்தோனியாரை வழிபட்டு செல்லும் ஒரு புனித பூமியாக காணப்படும் நிலையில், தங்போது, அங்கு இரகசியமாக புத்தர் சிலை வைத்து பொளத்தமயமாக்கல் தீவிரமாக இடம்பெற்று வருகின்றமை இந்திய இலங்கை உறவில் விரிசலை ஏற்படுத்த கூடும் எனவும் சமூக ஆர்வலர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்தமயமாக்கலை முன்னெடுக்கும் சிறிலங்கா படையினர் கச்சத்தீவையும் விட்டுவைக்காது அங்கேயும் பாரிய புத்தர் சிலை ஒன்றை பிரதிஸ்டை செய்துள்ளார்கள்.

இவ்வாறான நிலையில், இது வரை காலமும் இந்திய இலங்கை பக்தர்கள் மட்டுமே திருவிழாவில் கலந்து கொண்டிருந்த நிலையில், இந்த வருடம் புதிதாக பௌத்த பிக்குகள் குழு ஒன்றும் கச்சதீவிற்கு சென்றிருந்தைமையும் தற்போது, பலத்த சந்தேகத்தை எழுப்பியுள்ளது.

மேலும் கச்சதீவில் 5 முதல் 10 கடற்படையினரே கடமையில் இருக்கின்ற நிலையில், இவ்வாறு பிரமாண்டமாக புத்தர் சிலை கட்டிருப்பது சமூக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கச்சதீவில் அந்தோனியார் ஆலயம் மட்டுமே இருக்க வேண்டும் என்றும், அதனைத் தவிர நிரந்தரமான கட்டடங்கள் எவையும்





அமைக்க கூடாது எனவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இவ்வாறான நிலையில், அங்கு கடற்படையினருக்கான இருப்பிடம் கூட நிலையானதாக அமைக்கப் பட்டிருக்கிறது. ஒப்பந்த யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம். ஆனால் அந்த ஒப்பந்தத்தையும் மீறி தற்போது நிரந்தரமான பௌத்தமயமாக்கலுக்கான ஒரு திட்டமாக பாரியளவில் புத்தர் சிலை ஒன்று இரகசியமான முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, அந்த புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ள பகுதியை சூழ மிக உயரமான கம்பிகள் பாவித்தும் பனை ஓலை வேலி அமைத்து மிக மிக இரகசியமாக கட்டுமானப் பணிகள் நிறைவடைந்தள்ளன.

அண்மையில் நடைபெற்ற திருவிழாவின் போதும் அங்கு சென்ற கிறிஸ்தவ மதகுருமாரையோ, பக்தர்களையோ மற்றும் ஊடகவியலாளர்களையோ குறித்த இடத்திற்கு அருகில் கூட செல்ல கடற்படையினர் அனுமதி வழங்கவில்லை. இதேவேளை, கச்சதீவு பகுதியில், கடற்கரையை சூழவும் காட்டு மரங்களே வளர்ந்திருந்தன. ஆனால் தற்போது, கடற்படையினர் அரச மரங்களை கொண்டுவந்து குறித்த பகுதியில் வைத்துள்ளனர் என்பதும் அப்பட்டமாகத் தெரிவிகின்ற ஒரு விடயம்.

கச்சத்தீவு சிறிலங்கா கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. கச்சத்தீவை இந்தியா, இலங்கைக்கு வழங்கும் போது அந்தோனியார் ஆலயத்துடனேயே வழங்கியது.

இவ்வாறான நிலையில், இலங்கை பொருளாதார ரீதியாக அதலபாதாளத்திற்கு சென்று கொண்டிருந்த போது, பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்கு, சர்வதேச நாடுகள் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியுள்ள போதும், இந்தியா வழங்கிய ஒத்துழைப்பை ஒருபோதும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

ஆகவே, இவ்வாறான சிறுமைத்தனமான செயற்பாடுகள் இலங்கை இந்திய நல்லுறவில் பாரிய விரிசலாக உருவெடுக்கும் சந்தர்ப்பங்களும் இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கச்சத்தீவில் அந்தோனியார் ஆலயம் மாத்திரமே இவ்வளவு காலமாக இருந்தது. ஆனால் இப்போது அங்கே பெரிய புத்தர் சிலை எப்படி வந்தது என்பது விடைகாண முடியாத கேள்வியாகவுள்ளது.

இலங்கையில் இருப்பவர்களுக்கும் தமிழ்நாட்டில் இருப்பவர்களுக்கும் கச்சதீவு அந்தோனியார் ஆலயத்திற்கு உரிய இடமென்று தெரியும். இருப்பினும் வடக்கு மற்றும் கிழக்கில் பௌத்த அடையாளங்களை நிறுவிவருவதைப் அதேபோன்று கச்சதீவிலும் தற்போது பௌத்த சின்னத்தை நிறுவியுள்ளனர்.

கச்சத்தீவையும் விட்டுவைக்காத நிலைமையே தற்போது இருக்கின்றது. ஆனால் கடற்படையினர் வழிபடுவதற்காக அது வைக்கப்பட்டது என்று இனி வரும் காலங்களில் பதில் வரலாம்.

குறித்த விவகாரம் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறு இருப்பினும் அங்கு அமைக்கப்பட்ட பிரமாண்டமான புத்தர் சிலை எவ்வாறு கட்டப்பட்டது என்பது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து அதனை நிறுவியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்களும் மதத் தலைவர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.

**இலங்கையில் இருப்பவர்களுக்கும் தமிழ்நாட்டில் இருப்பவர்களுக்கும் கச்சதீவு அந்தோனியார் ஆலயத்திற்கு உரிய இடமென்று தெரியும். இருப்பினும் வடக்கு மற்றும் கிழக்கில் பௌத்த அடையாளங்களை நிறுவிவருவதைப் அதேபோன்று கச்சதீவிலும் தற்போது பௌத்த சின்னத்தை நிறுவியுள்ளனர்.**





புனித பிரியா

# பறிபோகும் கன்னியா வெந்நீரூற்று

## தமிழர்களின் அடையாளங்களை சூறையாடும் தொல்பொருள் திணைக்களம்

கன்னியா வெந்நீரூற்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒரு இயற்கை வெந்நீரூற்று ஆகும். குறிப்பிட்ட அந்த இடத்தில் 90 – 120 செ.மீ ஆழமுடைய ஏழு சிறிய சதுர வடிவான கிணறுகள் அமைந்துள்ளன. இயற்கையாகவே ஏற்பட்டிருந்த வெந்நீரூற்றில்நாளடைவில் செயற்கைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிணற்றிலுமிருந்து வெவ்வேறு வெப்பநிலையில் நீர் ஊறி வந்து கொண்டிருக்கும்.

இலங்கையில் அடையாளம் காணப்பட்ட பல வெந்நீரூற்றுக்கள் இருந்தாலும் கன்னியா வெந்நீரூற்றுக்கள் சமய நம்பிக்கையிலும், விஞ்ஞான ரீதியிலும் பல சிறப்புகளைப் பெற்று தனித்துவமாக மிளிர்கின்றன. முக்கியமாக கன்னியாவில் அருகருகே உள்ள ஏழு வெந்நீரூற்றுகளிலும் ஏழு வித்தியாசமான வெப்பநிலைகளில் தண்ணீர் இருப்பதுதான் அதிசயம். இலங்கையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வரவேற்பைப் பெற்ற இடங்களுள் கன்னியா வெந்நீரூற்று முக்கியம் பெறுகின்றது.

திருகோணமலை நகரில் இருந்து 3.9 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது கன்னியா வெந்நீரூற்று. இக்கிணற்றுகளுக்கே என தனித்துவமான வரலாற்றுக் கதையும் உள்ளது. திருகோணமலை சம்பந்தப்பட்ட ஐதீக புராணக் கதைகள் பெரும்பாலும் இராவணன் சம்பந்தப்பட்டவை. கன்னியா வெந்நீரூற்றும் இராவணனோடு சம்பந்தப்பட்ட ஒன்றாகத்தான் நம்பப்படுகின்றது. சிவபெருமானின் தீவிர பக்தனாக இருந்த இராவணன் திருகோணமலையில் குடிகொண்டிருக்கும் கோணேஸ்வரர் கோயிலுக்கு சென்றான். அங்கு வீற்றிருந்த சிவலிங்கத்தைக் கண்டு வியந்து அந்த லிங்கத்தை அவனின் தாயின் வணக்கத்திற்காக கொண்டு செல்ல விரும்பினான். இதனால் பாறையின் மீது இருந்த சிவலிங்கத்தை தனது வாளால் வெட்டி பெயர்த்து எடுக்க முற்பட்டான்.

இதனால் கடும் கோபம் கொண்ட சிவன் அந்த பாறையை தனது காலால் அழுத்தியதால் இந்த பாறைக்குள் சிக்குண்டான் இராவணன். இதைக்கேள்வியுற்ற அவன் தாய் தனது மகன் இறந்துவிட்டதாக எண்ணி அதிர்ச்சியில் உயிரிழந்தாள்.



ஆனால், இராவணனோ இறக்க வில்லை. சிவனை பிரார்த்தனை செய்து தாம் செய்த செயலை மன்னிக் கும்படி வேண்டிக்கொண்டான். தனது பக்தனைச் சிவனும் மன்னித்தார். கோணநாயகரிடம் பெற்ற லிங்கத்தை கையிலேந்திக் கொண்டு இராவணன் செல்லும்போது, விஷ்ணு அந்தண வடிவம் எடுத்து இராவணனைச் சந்தித்து தாயார் உயிர் நீத்த செதியைத் தெரிவித்தார். இதைக் கேட்டதும் இரா வணன் துக்கக் கடலில் மூழ்கினான். அந்தணன் அவரைத் தேற்றியபின், இறுதிக் கிரியைகளைச் செயுமாறு நினைவுறுத்தி,இப்புண்ணிய தலத்தில் கருமாதிக் கிரியைகளைச் செய்தால் அவர் மோட்சத்தை அடைவது திண் ணம் என்று கூறினார்.

ஈமக்கிரியைகளை அந்தணரையே செய்யச் சொல்லி இராவணன் வேண்ட, அதற்குச் சம்மதித்த அந்தணர் இரா வணனை அழைத்துக் கொண்டு திருகோணமலைக்கு மேற்கிலுள்ள கன் னியா என்னும் தலத்திற்குச் சென்று, அவ்விடத்தில் தமது கையில் இருந்த தடியினால் ஏழிடத்தில் ஊன்றினார். அந்தண வடிவம் கொண்டு மகா விஷ்ணு ஊன்றிய ஏழு இடங்களில் நீரூற்றுக்கள் தோன்றின எனப் புரா ணங்கள் கூறுகின்றன. இவ்விடத்தில் அந்தியேட்டி கடமைகள் செயப்படின் அவ்வான்மாக்கள் முத்தியடையும் என்று நம்பப்படுகிறது. உலகில் பல இடங்களில் இது போன்ற வெந் நீர் ஊற்றுக்கள் காணப்படுகின்றன. இலங்கையில் வெந்நீர் ஊற்றுக்கள் அம்பாந்தோட்டை முதல் திருகோண மலை வரை கன்னியா உட்பட 10 இடங்களில் காணப்படுகின்றன.

இதுதவிர ஆரம்ப காலங்களில் கண் ணகி வழிபாடு திருகோணமலை கன்னியா பிரதேசத்தில் இருந்திருக்க லாம் எனவும் கண்ணகி என்ற பெயர் காலப்போக்கில் மருவி கன்னியா என்று மாறிப்போயிருக்கும் என்றும் வர லாற்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள்.

வரலாற்று ரீதியாக தமிழர் அடை யாளமாக இவை திகழ்ந்தாலும் தற்போது இங்கு பெரும்பான் மையினரான சிங்களர் ஆதிக்கம் மேலோங்கியிருக்கிறது. இதனைச் சூழ பௌத்த ஆலயங்களை அமைத்து முற்றிலும் பௌத்த புனித தலமாக மாற்றியமைத்துக்கொண்டு வருகின்றனர் அவர்கள். பெயர்ப் பலகைகளில் கூட தமிழர்க ளுக்கான இடம் மறுக்கப்பட்டுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும். தமிழர்களுக்கே உரித்தான கலை கலாசார பொக்கிசங்களுள் ஒன்றான கன் னியா வெந்நீரூற்றை பாதுக்காத்துக் கொள்வது கட்டாயமானது. தமிழர்களின் கடமையும் கூட.

**வெந்நீரூற்றுப் பிரதேசத்தில் தமிழ் மொழியிலும் செய்தியைக் கொண்டிருந்த அறிவிப்புப் பலகை அகற்றப்பட்டு, ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே செய்தியைக் கொண்ட அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கே விநியோகிக்கப்படும் நுழைவுச் சீட்டில் அந்தப் பிரதேசம் ஒரு பௌத்தமதப் பிரதேசம் எனவும் அறியத் தரப்பட்டுள்ளது**



உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இந்த வெந்நீரூற்று இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்த காலத்தின் போது களையிழந்து காணப்பட்டது. ஆயினும் யுத்தம் முடிவுற்றதன் பின்னர் தற்போது அதிகமாக உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் ஒரு சுற்றுலாத் தலமாக இந்த கிணறுகள் திகழ்கின்றன. போர் முடிவுற்றதன் பின்னர் இந்த உல்லாசப் பிரயாண மையத்தைச் சிங்களமயமாக்கும் நடவ டிக்கைகள் நடைபெற்று வந்தமையால் பல்வேறு தரப்பினரும் இதற்கு எதிர்ப்புக்களை தெரிவித்து வந்தனர்.

வெந்நீரூற்றுப் பிரதேசத்தில் தமிழ் மொழி யிலும் செய்தியைக் கொண்டிருந்த அறிவிப் புப் பலகை அகற்றப்பட்டு,ஆங்கிலம்,சிங்களம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே செய்தியைக் கொண்ட அறிவிப்புப் பலகை வைக்கப்பட் டுள்ளது. அத்துடன் அங்கே விநியோகிக்கப் படும் நுழைவுச் சீட்டில் அந்தப் பிரதேசம் ஒரு பௌத்தமதப் பிரதேசம் எனவும் அறியத் தரப்பட் டுள்ளது. பல ஆண்டுகளாக திருகோணமலை



பட்டிணமும் சூழவுள்ள பிரதேசமுமாக உள்ளூராட்சி மன்றத்தின் பராமரிப்பிலிருந்த கன்னியா வெந்நீர் ஊற்றுப் பிரதேசம் 2010-ம் ஆண்டு தொல்பொருள் ஆய்வு மற்றும் வன பரிபாலனம் என்ற காரணங்களை கூறி சபையின் எதிர்ப்புகளுக்கும் மத்தியில் பறிமுதல் செய்யப்பட்டு, தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப் பட்டது.

மேலும் நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வந்த வழமையான பாதை மூடப்பட்டு 2014 ம் ஆண்டு புதிய பாதையொன்று அமைக்கப்பட்டுவது, கன்னியா வெந்நீர் ஊற்று பிரதேசத்தில் பெரும்பான்மை சமூக மக்களை குடியேற்றுவதற்கான வேலைப்பாடுகள் மேற்கொள்ளப்படுவது என்பன நாம் யாவரும் அறிந்த விடயமாகும்.

திருகோணமலை மாவட்ட இந்துக்கள் பெரும்பாலும் சமய மரபுகளின் படி இந்த தலத்திலேயே இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்கான அந்தியேட்டிக் கிரியைகளை செய்துவருகின்றனர். ஏழு வெந்நீர் ஊற்றுக் கிணறுகளைக் கொண்ட கன்னியா பகுதியில் இப்போது இந்து மத அடையாளங்கள் அருகி பௌத்த வழிபாட்டுக்குரிய அடையாளங்களே முன்னிலைப் படுத்தப்பட்டுவருவதாக இந்து மக்கள் தெரிவிக்கின்றனர். காலம் காலமாக இலங்கையில் இருந்து வரும் இந்து சமய வழிபாட்டு தலங்களை பேரினவாத சிங்கள பௌத்தர்கள் தமது என்று சொந்தம் கொண்டாடி வருகின்றனர்.

இந்த நிலைமை இனியும் தொடராது மக்களாய் நாம் ஒன்றிணைந்து நமது மரபு வழி வழிப்பாட்டு தளங்களின் அடையாளங்களை பாதுகாப்பதற்கு ஒன்றிணைய வேண்டும். பேரின வாதத்தின் இனச் சுத்திகரிப்பு என்பது அந்த இனத்தின் அடையாளங்களை அழிப்பதைப் பிரதான வழிமுறையாகக் கொண்டுள்ளது. வரலாற்று உண்மைகள், தடயங்களை அழிப்பதும்,அவற்றைப் பேரினவாத அடையாளமாக முன்னிறுத்துவதும் இனச்சுத்திகரிப்பின் அடிப்படைகளாக அமைகின்றன.

அழிக்கப்படும் வரலாற்றுத் தடயங்களைப் பாதுகாத்தல் என்பது பேரினவாதத்திற்கு எதிரான அரசியலின் முக்கிய கூறாக அமைகிறது. ஒடுக்கப்படும் இனத்தின் அடையாளங்களை அழித்து அதனை ஒடுக்கும் இனம் பிரதியீடு செய்யும் நிகழ்ச்சிப் போக்கிற்கு எமது கண்முன்னே காணக்கிடைக்கும் உதாரணம் திட்டமிட்டு அழிக்கப்படும் வரலாற்று ஆதாரமான கன்னியா வெந்நீரூற்று. இது இரத்த சாட்சியாய் உறைந்து கிடக்கின்றது.

கடந்த 10 வருட காலத்திற்கும் மேலாக பேரினவாதிகளினால் இந்த வெந்நீரூற்று சொந்தம் கொண்டாடப்பட்டு வருகின்றது. பேரினவாதிகளின் இந்த செயற்பாடு தமிழர்களின் பாரம்பரிய வரலாற்று உரிமை மறுதலிப்பு என்பதே சரியானதாகும். இன்று திருக்கோணமலையை மையப்படுத்திய தமிழ் அரசியல் கட்சிகளும் அதன் உறுப்பினர்களும் தமிழர் குடியேற்றம் என்ற போர்வையில் இந்து கோவில் நிலங்களையும் பொதுசொத்துக்களை மறைமுகமாக விற்பனை செய்து தமது சொந்த கஜானாக்களை நிரப்புவதில் அக்கறை கொண்டுள்ளார்களே தவிர, திருக்கோணமலையில் தமிழர்களின் பாரம்பரிய உரிமைகளையும் வரலாற்று அடையாளங்களையும் பாதுகாத்து தமிழர்களின் இருப்பை பாதுகாக்கும் நோக்கிலான எந்த செயல்திட்டங்களையும் முன்னெடுப்பதில் அக்கறை கொள்பவர்களாக இல்லை என்பதே உண்மை.



> **ஈழத் தமிழரைப் பொறுத்தவரை உருப்படியான அரசியல் தலைமைத்துவம் ஒன்று இல்லாத நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதே உண்மை நிலவரமாகும். இந்த நிலைமை உடனடியாக நிவர்த்தி செய்யப்படவேண்டிய விடயமாகும். இவ்விடயத்தில் புலம்பெயர் உறவுகளும்,உள்நாட்டு புத்திஜீவிகளும், சமூகப்பற்றாளர்களும் அக்கறையுடன் செயல்படவேண்டிய அவசியத்தை கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம் வலியுறுத்தி நிற்கிறது.**

கன்னியா வெந்நீர் ஊற்றுப் பகுதியில் பேரினவாதம் முன்னெடுத்து வரும் வரலாற்று திரிபுபடுத்தல்களை சட்டபூர்வமாவதை தடுப்பதற்கான முயற்சிகளை இனியாவது காலதாமதமின்றி மேற்கொள்ள தவறின் கன்னியா வெந்நீர் ஊற்றுக்களும் அந்த பிரதேசமும் வில்கம் விகாரையின் ஒரு பகுதியாக பிரகடனப்படுத்துவது நிச்சயம் நடந்தேறும். தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்கும் பேரினவாதத்தின் செயற்திட்டங்கள் ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி அமைதியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதேவேளை தமிழர் தாயகத்தின் வரலாற்று உரிமைகளையும் அவற்றின் அடையாளங்களையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களும் தமிழ் மக்கள் நம்பிக்கை வைத்து தமது பிரதி நிதிகளாக பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டவர்களான தமிழ் அரசியல்வாதிகள் தமது கடமை பொறுப்புக்களில் இருந்து விலகி வெகு தூரம் நிற்பதையே கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றது.

எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் வெந்நீர் ஊற்று விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தின் கவனத்தை ஈர்க்க முயலாமையானது வேதனைக்குரியதும் வெட்கப்பட வேண்டியதும் கண்டனத்துக்குரியதுமான விடயமாகும். பாராளுமன்றத்தின் மூலம் தமழ் மக்களுக்கு நியாயமான தீர்வுஒன்றினை பெறமுடியாது என்றாலும் தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான குரல்களும் செல்லாக் காசென்பதை இதன் மூலம் முழு உலகுக்கும் வெளிப்படுத்தியிருக்கமுடியும்.

ஆக, ஈழத்தமிழரைப் பொறுத்தவரை உருப்படியான அரசியல் தலைமைத்துவம் ஒன்று இல்லாத நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதே உண்மை நிலவரமாகும். இந்த நிலைமை உடனடியாக நிவர்த்திசெய்யப்படவேண்டிய விடயமாகும். இவ் இவிடயத்தில் புலம்பெயர் உறவுகளும்,உள்நாட்டு புத்திஜீவிகளும், சமூகப்பற்றாளர்களும் அக்கறையுடன் செயல்படவேண்டிய அவசியத்தை கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம் வலியுறுத்தி நிற்கிறது.



# ஜே.வி.பி.யின் எழுச்சியும் பிரதான கட்சிகளின் நடுக்கமும்

ஜே.வி.பி. எனும் பெயரை சொல்லவும், கேட்டகவும் அஞ்சிய காலப்பகுதிகளை யாரும் சீக்கிரம் மறந்து இருக்க முடியாது, 1983ம் ஆண்டு இனக்கலவரத்தை எந்த ஒரு சிறுபான்மை இனத்தவராலும் மறந்திருக்க முடியாது, இன்று வரை கறுப்பு ஜூலை எனப்படுவது ஏதோ ஒரு பயத்தை எமக்குள் விதைத்து செல்கிறது.

இலங்கையின் இருண்ட யுகமாக இந்த 1983ம் ஆண்டு கலவரம் இன்றளவும் மக்கள் மத்தியில் மறக்க முடியாத நிகழ்வாக காணப்படுகிறது, குறிப்பாக தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன, தமிழ் மக்கள் டயர்களை இட்டு கொளுத்தி எரிக்கப்பட்டார்கள் என்பன எல்லாம் வரலாற்றில் மறக்கமுடியா கருப்பு பக்கங்கள்.



அருண் செல்வராஜ்

இதற்கும் ஜே.வி.பிக்கும் உண்மையில் தொடர்பு உண்டா? அல்லது ஏதோ ஒரு வகையில் தொடர்பு படுத்தப்பட்டதா என்பதை நாம் சிந்திக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். 2022ம் ஆண்டு காலி முகத்திடல் கலவரத்தையும், 1983ம் ஆண்டு ஜூலை கலவரத்தையும் ஏதோ ஒரு வகையில் ஜே.வி.பி மீது திணிக்கப்பட்ட கலவரமாக நான் பார்க்கிறேன் .



### 1971ம் ஆண்டுக் கிளர்ச்சி,
### அடுத்து 1977, 1983 ம் ஆண்டுக் கிளர்ச்சி:

1987, 1989ம் ஆண்டு கிளர்ச்சி எல்லாவற்றிலும் ஜே.வி.பி எனும் ஒரே பெயர் இடம் பெறக் காரணம் என்னவாக இருக்கும் என்று தார்மீக ரீதியில் நோக்குவோமேயானால், 2022ம் ஆண்டு காலி முகத்திடல் கலவரத்தினை ஜே.வி.பி மீது திணிக்கப்பட்ட வரலாற்றோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது .

1971, 1989 ஆண்டுகளில் இடம்பெற்ற கலவரங்களில் ஏதோ



ஒரு வகையில் ஜே.வி.பியினர் இழுத்து விட்டு இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. இலங்கை சுதந்திர கட்சி, ஐக்கிய தேசிய கட்சி எனும் இரு பெரும் கட்சிகளுக்கு நடுவே ரோகண விஜயவீர எனும் ஒரு தனி மனிதனின் கம்யூனிச சிந்தாத கொள்கைகளில் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் நாடு முழுதும் இடம்பெற்ற கலவரங்களுக்கு காரண மானவர்களாக இருந்திருக்க முடியுமா என்றால் நிச்சயமாக இருக்க முடியாது.


உதாரணமாக இந்தியாவின் நாம் தமிழர் கட்சியின் வருகையை போலவே ஒரு காலகட்டத்தில் ஜே.வி.பி இருந்திருக்கும்.

நான் இரண்டு கட்சிகளின் கொள்கைகளை ஒப்பிடவில்லை, ஒரு குறிப்பிட்ட நோக்கத்தில் ஈர்க்கப்பட்ட வாலிபர்கள் ஒன்றிணைந்து ஒரு முழு நாட்டிலும் கலவரத்தை கட்டவிழ்த்து விடுவது சாத்தியமா? அப்போது விடுதலை புலிகளின் ஆரம்ப காலகட்டம் வேறு. ஆக நாட்டின் புலனாய்வு எந்தளவுக்கு இருந்து இருக்கும்?

ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கப் போகிறது என்பதை அரசு நிச்சயம் அறிந்திருக்க வாய்ப்பு இருந்திருக்கும், அதை அப்படியே ஆடவிட்டு மக்களை திசை திருப்ப, முடிந்த அளவு அரசு இந்த கலவரத்தை பயன்படுத்தி இருக்குமோ என எண்ண தோன்றுகிறது. அதைக் கடந்து பலவருட இடைவெளிக்கு பிறகு அதே ஜே.வி.பி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் இன்று பெரும் எழுச்சி பெற்றதுக்கு காலி முகத்திடல் கலவரம் பிரதானமாக காணப்பட்டது .

தன்னிச்சையாக பொதுமக்களால் 100 நாட்களை தாண்டி செய்யப்பட்ட அமைதி வழி போராட்டங்களை அரசாங்கம் குண்டர்களை கொண்டு அடக்கப் பார்த்தது. அதை ஜே.வி.பி மீது திணிப்பதற்கு பெரும் பிரயத்தனம் மேற்

> **பல வருடங்களாக ஜே.வி.பி மீது இருந்த கறை தற்போது நீங்கியுள்ள நிலையில், அரசாங்கம் அந்த நிகழ்வை மக்களுக்கு ஞாபகப்படுத்தி மீண்டும் ஜே.வி.பி மீது கறைபூச பலவாறு எத்தனித்தது. ஆனாலும் அது முழுமை யாக்க் கைகூடவில்லை. ஆயினும் அண்மைக்கால மாற்றத்தின் விளைவு பழமைவாத, அடிப்படைவாத சிங்கள மக்களுக்கு எந்தவகையில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது என்பது தேர்தல்களுக்கு பின்னரே அறிந்து கொள்ள முடியும்.**



கொண்டது. ஆனாலும் சமூக வலைத்தளங்கள் மூலமாக விடயங்கள் ஒளிபரப்பப்பட்டதன் காரணமாக மக்கள் பூரண தெளிவைப் பெற்று இருந்தனர். ஆகவே ஜே.வி.பி. மீது பூசப்பட இருந்த கலவர அடையாளம் தகர்த்து எறியப்பட்டது .

அதன் எழுச்சியே சிங்கள கிராமங்கள் தொட்டு,தலை நகர் வரை ஜே.வி.பி எனும் நாமம் ஒலிக்கிறது. சொல்லப் போனால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் கூட பரவலாக ஜே.வி.பி. வர வேண்டும் என்கிற கோசம் இருப்பதை காணலாம் .

ஆனால் தவறியேனும் ஜே.வி.பி வந்து விட கூடாது என்று அரசாங்கமும், பிரதான எதிர் கட்சியும் கவனமாக இருப்பது பாராளுமன்ற அமர்வுகளில் காண கூடியதாகவே உள்ளது. அவ்வாறு ஜே.வி.பி இலங்கை அரசியலில் முக்கிய பங்கு வகிக்குமாயின், இதுவரை இலங்கையின் பொருளாதார பிரச்சனைகளுக்கு காரணமானவர்களைக் கையும் களவுமாகப் பிடிக்கும் வாய்ப்புகள் உருவாகிவிடும். ஆளும் தரப்புக்கும் பிரதான எதிர் தரப்புக்கும் இடையில் நட்பு ரீதியான பழக்கம் உள்ளதால் கூட்டுக் களவாணிகளாக ஜே.வி.பியின் வருகையை பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்புவதாகத் தெரிய வில்லை .

ஆனாலும் இருக்கின்ற வாக்குப் பலத்தை ஜே.வி.பி தக்கவைத்துக் கொள்ள வேண்டிய நிலை காணப்படுகிறது. நேரெதிராக, அதிகப்படியான ஆர்ப்பாட்டங்கள் ஜே.வி.பி. மீது மக்களுக்கு அதிருப்தி உண்டாக்கவும் காரணமாக அமைய வாய்ப்புக்கள் உள்ளதை அனுரகுமார உணர வேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக சிங்கள கிராம மக்களின் வாக்குகளில் கணிசமானளவும்,

பல்கலைக்கழக மாணவர்களின் ஆதரவும் ஒரு குறிப்பிட்ட அளவு ஜே.வி.பியை நோக்கி ஈர்க்கப்பட்டுள்ளது. ஆனாலும், கடந்த வார இலங்கை நாணயத்தின் பெறுமதி உயர்வினால் சாதாரண மக்கள் மத்தியில் ஒரு ததும்பல் நிலை உருவாகி உள்ளதை ஏற்று கொள்ளத்தான் வேண்டும். ஆகவே, பணத்தின் பெறுமதி எப்படி உயர்ந்தது, இது நிலைக்குமா என்பன போன்ற விடயங்களின் உண்மை நிலையை மக்களுக்கு எடுத்து சொல்ல வேண்டியதன் அவசியத்தை ஜே.வி.பி. உணரவேண்டும்.

பல வருடங்களாக ஜே.வி.பி மீது இருந்த கறை தற்போது நீங்கியுள்ள நிலையில், அரசாங்கம் அந்த நிகழ்வை மக்களுக்கு ஞாபகப்படுத்தி மீண்டும் ஜே.வி.பி மீது கறைபூச பலவாறு எத்தனித்தது. ஆனாலும் அது முழுமையாக்க் கைகூடவில்லை. ஆயினும் அண்மைக்கால மாற்றத்தின் விளைவு பழமைவாத, அடிப்படைவாத சிங்கள மக்களுக்கு எந்தவகையில் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது என்பது தேர்தல்களுக்கு பின்னரே அறிந்து கொள்ள முடியும்.

ஒரு வேளை குறிப்பிட்ட ஒரு மாதத்திற்குள் தேர்தல் நடத்தப்படுமாக இருந்தால் ஜே.வி.பியின்

சிங்கள கிராமங்கள் தொட்டு,தலை நகர் வரை ஜே.வி.பி எனும் நாமம் ஒலிக்கிறது. சொல்லப் போனால் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் கூட பரவலாக ஜே.வி.பி. வர வேண்டும் என்கிற கோசம் இருப்பதை காணலாம். ஆனால் தவறியேனும் ஜே.வி.பி வந்து விட கூடாது என்று அரசாங்கமும், பிரதான எதிர் கட்சியும் கவனமாக இருப்பது பாராளுமன்ற அமர்வுகளில் காண கூடியதாகவே உள்ளது. அவ்வாறு ஜே.வி.பி. இலங்கை அரசியலில் முக்கிய பங்கு வகிக்குமாயின், இதுவரை இலங்கையின் பொருளாதார பிரச்சனைகளுக்கு காரணமானவர்களைக் கையும் களவுமாகப் பிடிக்கும் வாய்ப்புகள் உருவாகிவிடும். ஆளும் தரப்புக்கும் பிரதான எதிர் தரப்புக்கும் இடையில் நட்பு ரீதியான பழக்கம் உள்ளதால் கூட்டுக் களவாணிகளாக ஜே.வி.பியின் வருகையை பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்கள் விரும்புவதாகத் தெரிய வில்லை .



வாக்கு வங்கியில் பாரிய பாதிப்புகள் ஏற்பட வாய்ப்பில்லை. ஆனாலும், அது தவறும் பட்சத்தில் கிராமப்புற விவசாயிகளின் வாக்குகள் குறைய வாய்ப்புகள் உள்ளன. கடந்த அரசாங்கம் இழைத்த பாரிய பிழைகளில் ஒன்றுதான் இலங்கை விவசாயத்தில் ஏற்பட்ட பாரிய நட்டம், உர பிரச்சனை போன்றன. அவற்றை நிவர்த்தி செய்ய அரசாங்கம் பெரு முயற்சிகளை எடுத்து வருகிறது. அளவுக்கதிகமான மானியங்கள் கிடைக்கும் போது அது ஜே.வி.பியின் வாக்குகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர் பார்க்கப் படுகிறது.

மேலும் தலைநகர் என்பது ஐக்கிய தேசியக்கட்சியின் கோட்டையாகும் , ஆனாலும் கடந்த வார கருத்து கணிப்பில் ஜே.வி.பியிற்கான ஆதரவு பெருகியுள்ளது. அதற்கு காரணம் கடந்த காலங்களில் மக்கள்பட்ட துன்பங்களே ஆகும். ஆனாலும் தற்போதைய ரூபாவின் பெறுமதி ஏற்றம் , பெருவாரியான வியாபாரத்தை நம்பியுள்ள தலை நகர மக்களுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும்.ஆகவே அவர்கள் ஏற்கனவே பழக்கப்பட்ட கட்சியை நாட அதிக வாய்ப்பு உள்ளது.

எனவே, தேர்தலின் கால தாமதம் என்பது என்னைப் பொறுத்தமட்டில் ஜே.வி.பியின் வாக்கு வங்கியில் சிறிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மையே. இதை எவ்வாறு ஜே.வி.பி சமாளிக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

போட்டியிடுகின்ற பெருவாரியான இடங்களை ஜே.வி.பி கைப்பற்றுமேயாக இருந்தால் அது எதிர்கால பாராளுமன்ற தேர்தலுக்கு பாரிய சக்தியாகவும், உறுப்பினர்களை அதிகரிக்க சிறந்த வாய்ப்பாகவும் அமையும் என்பதில் சந்தேகமில்லை.



# வாழ்வதற்காக போராடும் போராளிகள் பெண்கள்!!



அன்புஆதரவுஎன்பதன்
அர்த்தமாய் திகழ்பவர்
பெண்கள்!!
பெண்கள் நாட்டின்
கண்கள்!!
மார்ச் 8
சர்வதேச மகளிர்
தினம்!!

பெண்கள்
காலத்திற்கு
ஏற்ற பாத்திரம்!
மகளாய், சிறுமியாய்,
சகோதரியாய்,தாரமாய்,
அன்னையாய், தோழியாய்
எத்தனை ரூபங்கள்?

அத்தனை வேடத்திலும்
பாத்திரம் போல்மாறி
தன் அன்பையெல்லாம்
வற்றாத
அட்சய பாத்திரம் போல
வாரி வழங்கிடுவாள்!!

தாய்மையில்
சிறந்த பெண்கள்!
தரணியை ஆளும்
பெண்கள்!
சாதனை படைக்கும்
பெண்கள்!
ஆணும் பெண்ணும்
சமமே என
போரிட்டு,
குரல் கொடுத்து
ஐ.நாவில்
அனைத்துலகப்
பெண்களுக்கு
என ஒதுக்கிய நாளே
மார்ச் 8.

போராடிப் பெற்ற
மகளிர் தினம்
போற்றப்பட
வேண்டியதே!!

எனினும்
பெண்கள் சுதந்திரமாக
நடக்க முடிகிறதா?
கழுகுப்பார்வை பார்க்கும்
கயவர்கூட்டம்..
தாய்வழி
வந்ததை மறந்து
புரியும்
பாலியல் கொடுமைகள்..
பிஞ்சு முதல் கிழவிவரை
இம்சிப்பது
ஏனோ??

தாய்மையை மதிக்கும்
எவரும் இழிநிலை
செய்யார்!!
விண்ணிலும்
மண்ணிலும்
சாதனை படைத்து,
சூழலுக்கு இசைவாய்
தன்னை மாற்றி,
இல்லறத்தோடு
இசைந்து வாழ்கிறார்
மகளிர் இங்கு!

கொடுமைகள் கண்டால்
பொங்கியெழுந்து,
மற்றவர் உணர்வுகளை
மதித்து நடந்து,
நாளைய சமூகம்
நன்று வாழ
இன்று உழைப்பை
சிந்தும்
அத்தனை மகளிர்
கரங்களும் பற்றியே
உரக்கச் சொல்வோம்..

**மகளிர் தின**
**வாழ்த்துக்கள்!!**

**அம்முக்குட்டி**
( சர்வதேச மகளிர் தினத்திற்காக எழுதப்பட்டது.)



# மத அரசியல் வேண்டாம்

**“நாவற்குழியில் புத்த விகாரை கட்டியெழுப்பப்பட்டுவரும் ஒரு நிலக்காட்சியில், சிவபூமி அறக்கட்டளையின் அருங்காட்சியகமும் திருவாசக அரண்மனையும் கட்டப்பட்டிருப்பது போல,ஆனையிறவிலும் யுத்தவெற்றி வாசலை எதிர்நோக்கி ஒரு மரபுரிமை வாசலை சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு. நாவற்குழிச் சந்தியைப் போலவே ஆனையிறவிலும் அதாவது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலிலும் தமிழ் மக்களை அடையாளப்படுத்தும் கட்டுமானங்கள் அவசியம்.”**

யாழ்ப்பாணத்திற் செல்லும் போது கண்டி வீதியிலுள்ள தட்டுவன் கொட்டிச் சந்தியில் ஒரு நடராஜர் சிலை அமைக்கப்பட்டுள்ளது. நம் புலம்பெயர் தேசத்து தமிழ் உறவுகளின் ஒத்துழைப்பில் கரைச்சி பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் இந்த நடராஜர் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்த சிலை சுமார் 27 அடி உயரத்தை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அகில இலங்கையிலும் உள்ள மிக உயரமான நடராஜர் சிலை இதுதான்.



தமிழ் மக்களின் பண்பாட்டு தலைநகரமாகிய கவர்ச்சிமிகு யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் எவரும் முதலில்சிங்கள அரசால் ஆனையிறவில் அமைக்கப்பட்டிருக்கும் இரண்டு யுத்த வெற்றி வளாகங்களைக் கடந்துதான் உள்ளேவர வேண்டும். 2009க்கு பின் ஆனையிறவுப் பிரதேசம் யுத்த வெற்றிவாதத்தின் உல்லாசத் தலங்களில் ஒன்றாக மாற்றப்பட்டிருக்கிறது.

யாழ் குடாநாட்டில் முதலில் தென்படுவது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் படை நடவடிக்கை ஒன்றின்போது பயன்படுத்தப்பட்ட உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஒரு கவச வாகனமும், அருகில் அந்த வாகனத்தை தடுத்து நிறுத்திய படை வீரர் ஒருவரின் நினைவுச் சின்னமும். அதோடு சேர்த்து பக்கத்தில் ஒரு விருந்தகம்.



**அகமுரண்பாடுகளைத் தீர்க்கும் சக்திமிக்க சிவில் அமைப்புகளோ கட்சிகளோ இல்லாத அரசியல் மற்றும் ஆன்மீக வெற்றிடம் எங்களிடையே உள்ளது. இன்னொருபுறம், சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் எல்லைக் கற்களாக புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருமோர் ராணுவ, அரசியற் சூழலில், தமிழ் மக்கள் மத்தியிலும் இரவோடிரவாகச் சிலைகள் முளைக்கத் தொடங்கிவிட்டன. இவ்வாறான சிலை அரசியலின் பின்னணியில், ஆனையிறவில் நடராஜர் சிலை நிறுவப்பட்டுள்ளது.**

வலது பக்கத்தில் கடலேரியின் பின்னணியில் பிரம்மாண்டமான ஒரு யுத்த வெற்றிச்சின்னம் உண்டு. இலங்கைத் தீவை இரண்டு கைகள் ஏந்தியிருப்பது போன்ற அந்த யுத்த வெற்றிச் சின்னந்தான் யாழ்ப்பாணத்துக்குள் நுழையும் வெளியாட்களை வரவேற்கின்றது. அதாவது யுத்த வெற்றி உங்களை வரவேற்கிறது என்று பொருள். இவ்வாறு கடலேரியின் உப்புக் காற்றில் எப்பொழுதும் யுத்த வெற்றி வாடை வீசும் ஒரு பிரதேசத்தில்,தமிழ் மக்களின் வழிபாட்டுருக்களில் ஒன்றாகிய நடராஜர் சிலையை நிறுவியமை என்பதிலுள்ள அரசியல் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.

நாவற்குழியில் ஒரு புத்த விகாரை கட்டியெழுப்பப்பட்டுவரும் ஒரு நிலக்காட்சியில்,சிவபூமி அறக்கட்டளையின் அருங்காட்சியகமும் திருவாசக அரண்மனையும் கட்டப்பட்டிருப்பது போல,ஆனையிறவிலும் யுத்தவெற்றி வாசலை எதிர்நோக்கி ஒரு மரபுரிமை வாசலை சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு. நாவற்குழிச் சந்தியைப் போலவே ஆனையிறவிலும் அதாவது யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலிலும் தமிழ் மக்களை அடையாளப்படுத்தும் கட்டுமானங்கள் அவசியம்.

சிங்கள அரசாங்கம் அதைத் திட்டமிட்டு யுத்தவெற்றி வாசலாகக் கட்டியெழுப்பி வைத்திருக்கிறது. தமிழ்மக்கள் அதனை ஒரு மரபுரிமை வாசலாக மாற்ற வேண்டும். அந்த அடிப்படையில் சிந்தித்து கரைச்சி பிரதேச சபை முடிவெடுத்திருந்திருந்தால் அது வரவேற்கத்தக்கதே.

சமய நிறுவன மட சிவபூமி அறக்கட்டளை, தான் போற்றும் ஒரு சமயத்தை முன்னிறுத்தி இந்தச் சிலையை நிறுவியுள்ளது.ஆனால் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அப்படிச் சிந்திக்கத் தேவையில்லை.மேலும் பொதுவெளிச் சிற்பம் வேறு, மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் விக்கிரகம் வேறு. இரண்டையும் ஒன்றாகக் கண்டு மயங்கும் பொதுப்புத்தியை அரசியல்வாதிகள் இலகுவாகக் கையாள்வார்கள்.

ஆனால் அந்த மரபுரிமைக் கட்டமைப்பானது எப்படி அமைய வேண்டும்? அது சிங்கள பௌத்த சின்னங்களுக்கு எதிராக சைவச் சின்னங்களை முன் நிறுத்தும் ஒன்றாக அமைய வேண்டுமா? அல்லது தமிழ்த் தேசியத்தின் மதப்பல்வகைமையை பிரதிபலிக்கும் ஒன்றாக அமைய வேண்டுமா?

பிரயோக தேசியவாதமும் நடைமுறையில் பொதுப்புத்தியின் மீதே கட்டியெழுப்பப்படுகிறது. ஆனால், தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும். அதாவது ஜனநாயக அடிச்சட்டத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக் கட்டவேண்டும்.

இதை இன்னும் ஆழமாக சொன்னால், ஒருவர் மற்றவருக்கு சமம் என்ற அடிப்படையில் மக்களைத் திரட்டவேண்டும். இதை இன்னும் நடைமுறை வார்த்தைகளில் சொன்னால், ஒரு மதம் இன்னொரு மதத்திற்கு சமம் ஒரு பிரதேசம் இன்னொரு பிரதேசத்துக்கு சமம் யாரும் பிரதேச ரீதியாகவோ சாதி ரீதியாகவோ மத ரீதியாகவோ ஒருவர் மற்றவருக்கு மேலானவரும் அல்ல கீழானவரும் அல்ல என்ற அடித்தளத்தின் மீதுதான் ஒரு மக்களைத் திரளாகக் கூட்டிக்கட்ட வேண்டும். எனவே தேசியவாதம் எனப்படுவது மதப்பல்வகைமையின் மீதே கட்டியெழுப்பப்பட வேண்டும். மத மேலாண்மையின் மீது அல்ல. இந்த அடிப்படையில் சிந்தித்து தமிழ்மக்கள் தமது மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கவும் முன் நிறுத்தவும் வேண்டும்.

ஒவ்வொரு மதப்பிரிவும் அதனதன் மதச்சின்னங்களை முன்னிறுத்துவதில் தவறில்லை. அது அந்த மதத்தின் கூட்டுரிமை. ஆனால் ஒரு மதம் இன்னொரு மதத்தை அவமதிக்கும்போது அல்லது அந்த மதச் சின்னங்களை அழிக்கும்போது அல்லது ஒரு மதத்தின் மேலாண்மையை நிறுவ முற்படும் போதுதான் பிரச்சினை வருகிறது.அதாவது மதப்பல்வகைமை வேறு, மத மேலாண்மை வேறு.

தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழ்ப் பரப்பிலும் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் இந்திய மத்திய அரசை அணுகுவதற்கு மதத்தை ஒரு வாகனமாக பயன்படுத்த முயற்சிப்பது தெரிகிறது.இதில் சில தமிழ் அரசியல் வாதிகளும் அடங்குவர்.இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் மதசார்பு நிலைப்பாட்டைப் பின்பற்றி அதன்மூலம் இந்திய மத்திய அரசாங்கத்தை அணுக முடியுமா என்று மேற்படி தரப்புக்கள் சிந்திக்கின்றன. பாரதிய ஜனதா அரசாங்கமானது இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்று.எனவே ஈழத் தமிழர்கள் இந்தியாவை அணுகுவது என்றால் அந்த அரசாங்கத்தைத்தான் அணுக வேண்டும்.ஆனால் அதன் பொருள் இந்தியாவின் உள்நாட்டு அரசியலில் பாரதிய ஜனதா






பின்பற்றும் அதே நிகழ்ச்சி நிரலை ஈழத் தமிழர்களும் பின்பற்ற வேண்டும் என்றில்லை.

எமது தாயகப் பிரதேசம் இந்தியாவின் செல்வாக்கு மண்டலத்துட் காணப்படுகிறது. இந்தியாவின் ஆதரவுடன்தான் எந்த ஒரு வெளிச்சக்தியும் ஈழத் தமிழர்களுக்கு ஒரு தீர்வைத் தர முடியும் என்ற நிலை இருக்கிறது. இப்பிராந்திய யதார்த்தத்துக்கூடாக சிந்திக்கும்போது ஈழத்தமிழர்கள் பாரதிய ஜனதா அரசாங்கத்தைத்தான் அணுகவேண்டும். ஆனால் அதன் பொருள் தமிழ் தேசியத்தின் மதப்பல்வமையை பலியிட வேண்டும், இந்துத்துவா நாடாக மாற்றம் பெற வேண்டும் என்பதல்ல.

ஈழத்தமிழர்களின் நவீன அரசியல் எனப்படுவது மதப்பல்வகமையின் மீதே கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது.பெருமளவு இந்துக்களைக் கொண்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தில் முதலில் தோன்றிய இளையோர் அமைப்பாகிய யாழ்ப்பாண வாலிபர் முன்னணியை உருவாக்கியது(1924) ஒரு புரட்டஸ்தாந்து கிறிஸ்தவராகிய கன்டி பேரின்பநாயகந்தான்.

தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்டபோது, அதன் கால்கோல் விழா 1949ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி மாவட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் சீலஸ்ரீ துரைசாமிக் குருக்களின் ஆசியுடன் இடம் பெற்றது. இதுதொடர்பான தகவல்களை தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா மலரில் காணலாம். அக்கட்சியின் தலைவராகிய செல்வநாயகம் ஒரு புரட்டஸ்தாந்துக் கிறிஸ்தவர்.செல்வநாயகத்தை ஈழத்தமிழர்கள் தந்தை என்றும் ஈழத்துக் காந்தி என்றும் அழைத்தார்கள்.

தந்தை செல்வா இறந்தபோது அவருடைய உடல் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்யப்படவில்லை. இந்து முறைப்படி வேட்டி அணிவிக்கப்பட்டு,தகனம் செய்யப்பட்டது. தன்னைத் தலைவராக தெரிந்தெடுத்து, தந்தை என்று அழைத்த பெரும்பான்மை இந்து வாக்காளர்களை கௌரவிப்பதற்காக செல்வநாயகம் அவ்வாறு கேட்டுக் கொண்டதாக கருதப்படுகிறது.

எனவே ஈழத்தமிழர்களின் நவீன அரசியலானது மதப் பல்வகமையின் மீதுதான் கட்டியெழுப்பப்பட்டது.அதை இப்பொழுது ஒரு மதத்துக்கு மட்டும் உரியதாக குறுக்க



கக் கூடாது.குறிப்பாக நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது திருச்சபைகளுக்கும் ஆறுமுகநாவலர் போன்ற மதப் பெரியார்கள் மற்றும் இந்துபோர்ட் போன்ற இந்து அறக்கட்டளைகளுக்கும் இடையிலான போட்டியின் திரண்ட விளைவுதான்.ஆனால் அந்தப் போட்டியானது மத விரோதமாக,மோதலாக மாறவில்லை.

ஆனால்,2009க்குப் பின் எந்த ஒரு மதத் தலைவரும் துணிந்து கதையாத ஒரு வெற்றிடத்தில், ஒற்றைக் குரலாக ஒலித்த, முன்னாள் ஆயர் ராயப்பு ஜோசப் அவர்களுடைய அதே மறை மாவட்டத்தில் இந்துக்களுக்கும் கத்தோலிக்கர்களுக்கும் இடையிலான முரண்பாடு தூக்கலாகத் தெரிவது தமிழ்த் தேசியத் திரட்சிக்குப் பாதகமானது. தமிழ்த் தேசியத்தை மதப்பல்வகைமையின் மீது கட்டியெழுப்ப விரும்பும் எல்லாச் சக்திகளும் அந்த முரண்பாட்டைத் தீர்க்க முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறு அகமுரண்பாடுகளைத் தீர்க்கும் சக்திமிக்க சிவில் அமைப்புகளோ கட்சிகளோ இல்லாத அரசியல் மற்றும் ஆன்மீக வெற்றிடம் எங்களிடையே உள்ளது.இன்னொரு புறம்,சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் 'எல்லைக் கற்களாக' புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு வருமோர் ராணுவ, அரசியற் சூழலில்,தமிழ் மக்கள் மத்தியிலும் இரவோடிரவாகச் சிலைகள் முளைக்கத் தொடங்கி விட்டன.இவ்வாறான சிலை அரசியலின் பின்னணியில்,ஆனையிறவில் நடராஜர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

சிவ நடனத்துக்கு ஆன்மீக வியாக்கியானம் மட்டுமல்ல,பௌதீகவியல் வியாக்கியானமும் உண்டு.அது ஒரு பிரபஞ்ச நடனம் என்று வர்ணிக்கப்படுகிறது. ஆனையிறவுச் சிவனுக்கு மேலதிகமாக ஓர் அரசியல் பரிமாணமும் உண்டு.உப்புக் காற்றில் யுத்த வெற்றிச் சின்னங்களின் மத்தியில்,சிவனார் யாருடைய பஜனைக்கு ஆடப்போகிறார்?

டிலக்ஷி



# ஆதிலிங்கேஸ்வரர் ஆலய அழிப்பு

# கேவலமான அரசியல் தந்திரம்

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குள் வருகின்ற நெடுங்கேணி எனும் அழகிய விவசாய சிறுநகரின் எல்லைக்கிராமமான பாலமோட்டை – ஒலுமடு கிராமங்களுக்கு அரண் செய்யும் அடர் வனத்துள் எழுந்தருளப் பெற்றிருக்கிறார் அடிமுடி அறியமுடியாத வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர். வெடுக்குநாறி மலை சைவ ஆலயம் சிதைக்கப்பட்டமை சைவ மக்களை பலவந்தமாக வன்முறைக்கு இட்டு செல்லும் நோக்கில் பேரினவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இனவாத அரசியல் என்பது நம் அனைவருக்கும் தெள்ளத்தெளிவாகத் தெரிந்ததே.

வடக்கு, கிழக்கினை சிங்கள பௌத்த மயமாக்கும் பயங்கரவாத இன அழிப்பு அரசியல்வாதிகள் தமிழர்களின் தேசியத்தை சிதைத்து வேடிக்கை பார்க்கின்றன. தற்போது தொடர்ச்சியாக சைவர்களின் வழிபாட்டுத் தலங்களை சிதைப்பதும், இன அடையாளங்களை உடைப்பதும் கூட ஒரு வகை தீவிரவாதமே என்று பேரினவாதிகளுக்கு புரிய வாய்ப்பில்லை. வவுனியா வெடுக்குநாறி மலை சைவ ஆலயம் சிதைக்கப்பட்ட சம்பவத்திற்கு பின்னால் இருக்கும் அரசியல்வாதிகளையும், அரசியலையும் வெளிச்சம் போட்டு காட்டாவிடின் இறுதிகட்ட யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற அழிவை விட பல மடங்கு அதிகமான அழிவை தமிழ் மக்கள் சந்திக்க நேரிடும்.

மொழிசார்ந்த நம்முடைய அடையாளங்களை பாதுகாப்பது எவ்வளவு முக்கியமானதோ. அதை விட முக்கியமானது நம்முடைய கலாசாரம் சார்ந்த விடயங்களை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்கு கையளிப்பது. அதற்கானவையே இந்த சைவ கோயில்களும் தமிழ் இனம் சார்ந்த அடையாளங்களும். மேலெழுந்தவாரியாக பார்க்கும் போது ஒரு மலைக்கோவில், இதனாலென்ன வந்து விடப்போகின்றது எனத்தோன்றும்.

உண்மை நிலை அவ்வாறானது இல்லை. எங்களுடைய கண்ணுக்குத் தெரியாமல் படிப்படியாக தமிழர்களுடைய வழிபாட்டு தலங்கள் பௌத்த மயமாக்கப்பட்ட வண்ணமுள்ளன. பௌத்தர்களின் பழமை வாய்ந்த விகாரைகள் இன்னமும் பாதுகாக்கப்பட்டு ஆங்கு வழிபாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தவண்ணம் தான் காணப்படுகின்றன. அது போல தான் தமிழர்கள் வழிப்பட்டு வரும் பழமை வாய்ந்த சமய வழிபாட்டு தலங்களும் என்பதை இந்த சிங்கள பேரினவாதிகள் எப்போது தான் புரிந்து கொள்வார்கள் என்பது இன்னமும் புரியாத புதிராகவே காணப்படுகின்றது.

தொல்லியல் திணைக்களம் என்பது ஒரு நாட்டினுடைய எல்லா பிரஜைகளுக்குமானதாக இருக்க வேண்டுமே தவிர ஒரு தரப்பினருடைய வரலாற்றை அழித்து இன்னொரு தரப்பினருடைய





வரலாற்றை பதிய வைப்பதாக இருக்க கூடாது. இனியும் வடக்கு, கிழக்கில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் வெறு மனே வாய்ப் பேச்சு பேசிக் கொண் டிராமல் பேரினவாதிகளின் இந்த ஈனச் செயலுக்கு எதிராக ஓரணி திரள வேண்டும்.

பாரம்பரியமாக தமிழ் மக்கள் வழி பட்டுவந்த வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோயில் சிங்கள பேரின வாதிகளால் திட்டமிட்டு அழிக்கப் பட்டுள்ளது. தமிழ் இனம் நோக்கி ஏவப்பட்ட பல நூற்றாண்டு அடக் குமுறைகளின் இன்றைய வடிவ மாகவே இதனை கருத வேண்டும். இயற்கைக்கும் மரபார்ந்த நம் இடங் களுக்கும் எவ்வித இடையூறும் ஏற்ப டாத வகையில்தான் ஆதிசிவன் வழி பாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

அவரவர் நம்பும் தொன்மத் தெய்வங் களை அவரவர் நம்பிக்கையின்படி வழிபடும் உரிமை அனைவருக்குமே உண்டு. ஆனால் தமிழர்களாகிய நமக்கு சுதந்திரமான வழிபாட்டு உரிமை கூட இன்று இந்த நாட்டில் மறுக்கப்பட்டிருக்கின்றது. கடந்த காலங்களில் உரிமைசார் வழிபடும் செயற்பாடுகளை மேற்கொண்ட கோயில் நிர்வாகத்தினர் மிக மோசமாகத் தண்டிக்கப்பட்டனர்.

தொல்லியல் திணைக்களமும் பாதுகாப்பு படையும் இணைந்து மேற்கொண்ட வழக்கு இன்னமும் ஒரு முடிவுக்கு வராமல் நீண்டு கொண்டே செல்கிறது. வழக்கு தொடரப்பட்ட நாளிலிருந்து எதுவித ஆலய வழிபாடுகளையும் செய்ய முடியவில்லை. வழக்குத் தொடரப் பட்ட நாள் தொடக்கம் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த வெடுக்குநாறி மலை ஆதிசிவன் கோயில் தற்போது முற் றாக அழிக்கப்பட்டுள்ளது.

இச்செயலானது உலகெங்கும் வாழும் மொத்த தமிழர்களையும் உளப்பூர்வமாக பெரும் வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. பேரினவா திகள் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் அடக்கு முறைகளுக்கே தீர்வு கிட்டாத நிலையில் தமிழ் மக்களின் அடையாளங்களையும் தெய்வங்களையும் அழித்து மகிழ்கின்றனர். பேரினவாதிகளின் இந்த செயற்பாடு தமிழ் மக்களின் வழிப்பாட்டு உரிமையையே கேள்விக்கு றியாக்கியுள்ளது. எனவே இந்த உரிமை மறுப்பிற்கு எதிரான நமது குரலை சர்வதேச சமூகத்தின் முன் உரத்துச் சொல்லவேண்டிய காலம் வந்து விட்டது.

வடக்கு, கிழக்கினை சிவ பூமியாக சித்திரிக்கும் வேலைத் திட்டத் தின் ஓர் அங்கமாக ஆனையிறவில் நடமாடும் சிவன் உருவச் சிலை வைக்கப்பட்டது. அன்று ஆனையிறவை விடுதலைப் புலிகள் உயிர் தியாகத்தோடு கைப்பற்றிய போது இருந்த மகிழ்ச்சி நடமாடும் சிலை வைக்கப்பட்ட போது ஏற்படவில்லை.

வடக்கு, கிழக்கில் எந்தவொரு பாரிய சலசலப்பையும் ஏற்படுத்த வுமில்லை. இதற்கு மத்தியில் திருவள்ளுவர் இந்துவா? இல்லையா? எனும் பட்டிமன்றமும் நீண்டு செல்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் யுத்த வெற்றியை மீண்டும் அடையாளப்படுத்தும் முகமாக முப்படைகளின் தளபதி சவேந்திர சில்வா தாது கோபுர திரை நீக்கத் திற்கு சிங்கள நடனத்தோடு அழைத்து வரப்படுகின்றார்.

இதன் தொடர்ச்சியாகவே கச்சதீவில் திருட்டுத்தனமாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. இது சைவர்களை தனியாகவும், கிறிஸ் தவர்களை தனியாகவும், தமிழர்களின் தேசியம் காக்கும் அரசியல் கதைப்போரை தனியாகவும் பிரித்துவிட்டு அரசியல் குளிர்காயும் ஒரு வகை தந்திரம் என்றே கூற வேண்டும்.


இன்னொரு பக்கம் இந்துக்களையும், கிறிஸ்தவர்களையும் தமது பாதுகாப்புக்காக இந்தியாவின் அரவணைப்பை ஏற்றுக் கொள்ள வைக் கும் மனநிலையைத் தூண்டுவதோடு, இந்தியாவின் தலையீட்டால் 13ம் திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வைக்கும் அரசியல் சதியும் இதன் மூலம் அரங்கேற வாய்ப்பு உண்டு என்றே பல சமூக ஆர்வலர் களும் தெரிவித்து வருகின்றனர். இதேவேளை சரத்வீரசேகர'சமய பயங்கரவாதம் வடக்கு, கிழக்கில் தலை தூக்கி உள்ளது' என்று கூறி யுள்ளதோடு, விமல் வீரவன்ச 'நாடு சிங்கள பௌத்தர்களுக்கே சொந்த மாகும். தமிழர்களுக்கு இந்த நாட்டில் ஒரு அங்குல நிலமும் இல்லை' எனக் கூறியுள்ளதையும் கவனிக்க வேண்டும்.

இது தமிழர்களுக்கு எதிரான வெளிப்படையான அரசியல் சதித் திட்டமாகும். தமிழர்கள் தமது பாது காப்புக்காக வேறு வழியில்லாமல் இந்தியாவையும் 13ம் திருத்தச் சட் டத்தையும் நாட, அதற்கு எதிராக தெற்கை தூண்டிவிடும் ஒரு அரசி யல் நரித் தந்திரமாகும். ஆதலால் வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் இது குறித்து நன்று தெளிவாக புரிந்து கொண்டு தமது அரசியல் பயணத்தை மேற்கொள்ளல் வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அனைவரும் ஓரணி திரளவில்லை என்றால் தமிழர் கள் நிச்சயம் இன்னும் ஒரு பெரிய அழிவைச் சந்தித்தே ஆக வேண்டும். நம் வழிபாட்டு உரிமை நீக்கமும், பண்பாட்டு அடையாள அழிப்பும் நிகழ்த்தப்படும் சமநேரத்தில் அதற் கான எதிர்ப்பையும் கண்டனத்தையும் நம் தெய்வங்கள் காட்டிய அற வழியில் அணிதிரண்டு வெளிக்காட்ட வேண்டும்.

**வடக்கு, கிழக்கினை சிவ பூமியாக சித்திரிக்கும் வேலைத் திட்டத்தின் ஓர் அங்கமாக ஆனையிறவில் நடனமாடும் சிவன் உருவச் சிலை வைக்கப்பட்டது. அன்று ஆனையிறவை விடுதலைப் புலிகள் உயிர் தியாகத்தோடு கைப்பற்றிய போது இருந்த மகிழ்ச்சி நடனமாடும் சிலை வைக்கப்பட்ட போது ஏற்படவில்லை.**





# காலத்தை வென்ற இசைக் குரலோன் பொப் மார்லி!!

**நிறவெறியை எதிர்த்துப் போராடிய கரீபிய கலைஞன்!**
**மனித நேயத்திற்காகக் குரல் கொடுத்த ஜமேக்கா பாடகன்!**

சுருள் சுருளாக இருக்கும் நீண்ட தலைமுடி, வாயில் சப்பிய புகையிலை, மென்மையான இளஞ்சிரிப்பு என இருக்கும் ஜமேக்காவைச் சேர்ந்த அந்த இசைக்கலைஞனின் முகம் சம்பந்தமே இல்லாத பலருக்கும் நெருங்கிய உணர்வை இசையாய் உள்ளத்தில் ஏற்படுத்தும்.

காலத்தை வென்ற இசைக் குரலோன் பொப் மார்லி, மக்களுக்கான விடுதலையை, மானுட அன்பை இசையின் வழியாக பாடிய அந்த இசைக்கலைஞனின் பிறந்த தினம் பெப்ரவரி 6.

மனித நேயத்திற்காக குரல் கொடுத்த ஜமேக்கா பாடகனை, உலகம் முழுவதும் உள்ள இசைப் பிரியர்களுக்கு, குறிப்பாக இன்றைய இளைஞர்களுக்கு பொப் மார்லியைப் (Bob Marley) பற்றிய அறிமுகம் அதிகம் தேவையில்லை.

வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மகனாகப் பிறந்த நெஸ்டா ராபர்ட் மார்லி என்ற இயற்பெயருடைய பொப் மார்லி இங்கிலாந்தைச் சேர்ந்த நார்வல் சிங்ளேர் மார்லி என்பவருக்கும் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த செடெல்லா என்பவருக்கும் பிறந்தவர்.

கலப்பு இனத்தில் பிறந்ததால் பொப் மார்லி 'வொயிட் பாய்' என்று கேலியாக அழைக்கப்பட்டார். இப்படி அழைக்கப்பட்டது பின்னாளில் தனக்கென ஒரு தத்துவத்தை வளர்த்துக்கொள்ள உதவியது என மார்லி தெரிவித்துள்ளார். நான் வெள்ளையின மக்களின் பக்கமோ அல்லது கறுப்பின மக்களின் பக்கமோ இல்லை. நான் கடவுளின் பக்கம் நிற்கிறேன் என்பது தான் அந்த தத்துவம்.

## யார் இந்த பொப் மார்லி?

ஏன் பொப் மார்லியை உலகம் இந்தளவிற்கு கொண்டாடுகிறது? சேகுவேராவுக்கு அடுத்தபடியாக அதிகமான இளைஞர்களின் உடைகளில், நெஞ்சினில் பச்சை குத்தி இடம்பெறும் அளவுக்கு இளைய தலைமுறையை என்றும் கவர்ந்துள்ளார் எனலாம்.

பொப் மார்லியின் பாடல்களில் புதைந்திருக்கும் அரசியல் உணர்வு, விடுதலை வேட்கையே அதற்கான காரணங்களாகும். கரீபியன் தீவுகளின் சமூக மற்றும் அரசியல் நிலவரம் தொடர்பான அவரது வெளிப்பாடு சாதாரண தொழிலாளர் வர்க்கத்திலிருந்து பணக்காரர்கள் வரை ரசிகர்களை அதிகம் தேடித்தந்திருந்தது.

ஏன், தற்போதைய காலத்துக்கும் அவரது பாடல் வரிகள் பொருந்திப் போகின்றன. மார்லியின் பாடல்களில் பிரதிபலிக்கும் விடயங்கள் அனைத்தும் அவர் சிறு வயதில் கண்ணுற்ற சாட்சியங்களாகும்.

கருப்பு – வெள்ளை தம்பதியினருக்கு 1945ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி ஜமைக்காவின் செயின்ட் ஏன் பாரிஸ், நைன் மைல் எனும் இடத்தில் பிறந்த பொப் மார்லி, பின்னாளில் உலகின் தலைசிறந்த பாடகனாக சரித்திரத்தில் இடம்பிடிப்பான் என கனவிலும் அவனது பெற்றோர்கள் நினைக்கவில்லை.

## காதலும் கஞ்சாவும்:

1966ஆம் ஆண்டு பெப்ரவரி 10இல் பாடகியான ரீட்டா எண்டர்சனை மார்லி திருமணம் செய்துகொண்டார்.ரீட்டா மூலம் ரஸ்தபாரி எனும் மதம் மார்லிக்கு அறிமுகமானது.ஜமேக்காவில் அதிகமாக கஞ்சா விளையும். அது ரஸ்தபாரி மதத்தில் புனிதப் பொருளாக பார்க்கப்பட்டது. மேலும் மூலிகையாகவும், தியான நிலைக்கு உகந்ததாகவும் கருதப்பட்டது. மார்லி மாமிசம் உண்பதை தவிர்த்து சைவ உணவுகளை உண்ணத் தொடங்கினார். 1966 இல் ஜமேக்கா திரும்பிய மார்லி மீண்டும் லிவிங்ஸ்டன், டொஸ் ஆகியோருடன் இணைந்துகொண்டு மீண்டும் தனது இசை பயணத்தை ஆரம்பித்தார்.

'ஐலண்ட்ஸ் ரெக்கோர்ட்ஸ்' அனுசரணையுடன் முதல் தடவையாக முழு ஆல்பமொன்றை வெய்லர்ஸ் உருவாக்கினர். தீயைப் பிடி

ஐங்கரன் விக்னேஸ்வரா





(Catch a Fire) என்ற பெயரிலேயே அந்த ஆல்பம் வெளிவந்தது. பிரித்தானியா, அமெரிக்கா சென்று இசை நிகழ்ச்சி நடாத்த இந்த ஆல்பம் உதவியது.

பின்னர் அதேயாண்டு பர்னின் (Burnin) என்ற ஆல்பமும் வெளியிடப்பட்டது. இந்த ஆல்பத்தில் வரும் "I shot the Sheriff'', "Get Up Stand UP' ஆகிய பாடல்கள் மிகவும் பிரபலமாகின. இந்தப் பாடல்கள் மூலம் சர்வதேச அங்கீகாரத்தை மார்லி பெற்றுக்கொண்டார். இவரது பாடல்களை இன வேறுபாடின்றி கேட்கத் தொடங்கினர். "Get Up Stand UP' பாடலில் தங்களது உரிமைகளுக்காக எழுந்து போராடுங்கள் என கருப்பின மக்களைப்பார்த்து அறைகூவல் விடுக்கிறார்.

## உரிமைகளுக்காக எழுந்த பாடல்கள்:

*எழுந்து நில்லுங்கள்*
*உங்களது உரிமைகளுக்காக*
*வானத்திலிருந்து கடவுள் வந்து*
*அனைத்து துக்கங்களையும் எடுத்துக்கொண்டு*
*சந்தோஷத்தை வழங்குவாரென்று*
*நீங்கள் அனைவரும் நினைப்பீர்கள்*
*ஆனால், வாழ்க்கையின் பெறுமதியை புரிந்துகொண்டீர்களானால்*
*உங்களது வாழ்க்கையை இந்த பூமியில்தான் தேடுவீர்கள்*
*அப்போது நீங்கள் வெளிச்சத்தைக் காண்பீர்கள்*

அதனால் எழுந்து நில்லுங்கள் எனத் தொடரும் அப்பாடல் மூலம் நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு உலகம் பூராகவும் உள்ள ரசிகர்களை அவர்களது உரிமைகளுக்காக எழுந்து நிற்கவைக்க மார்லியால் முடிந்தது.

1975 இல் பொப் மார்லியும் வெய்லர்ஸும் (Bob Marly the Wailers) என குழுவின் பெயர் மாற்றப்பட்டது. இந்தக் குழு ரெகே இசையை உலகம் பூராகவும் கொண்டு சேர்க்க கடுமையாக முயற்சி செய்தது. இதன் பலனாக "No Woman No Cry' என்ற பாடல் வெளியாகி மிகவும் பிரபலமானது.

உலகம் முழுவதும் கண்ணீர் சிந்தும் கோடிக்கணக்கான பெண்களுக்காக அவர் இந்த பாடலை இயற்றி பாடினார். தான் ஒரு கலப்பினத்தைச் சேர்ந்தவன் என தெரிந்திருந்தும் மார்லி தன்னை ஆபிரிக்க வம்சாவளிசைச் சேர்ந்த கருப்பினத்தவன் என்று அறிமுகம் செய்து அடையாளப் படுத்திக்கொள்ள விரும்பினார்.

வெள்ளையர்களால் அடிமைத்தனமாக கருப்பினத்தவர்கள் அடிமைப் படுத்தப்படுகின்றமையைக் கண்டதனாலேயே மார்லி இந்த முடிவுக்கு வந்தார். கருப்பு, வெள்ளை, என்ற அனைத்து இன மக்களும் மனிதன் என்ற அடிப்படையில் ஒன்று சேர்வதே மார்லியின் கனவாகும்.

## நிறவெறிக்கு எதிராக மார்லி:

ஜமேக்காவில் நிறவெறிக்கு எதிராக போராடிய மார்க்ஸ் கிரேவின் அரசியல் செயற்பாடுகளுக்கு மார்லி உதவினார்.ஆபிரிக்காவில் மட்டுமன்றி உலகம் பூராகவும் வாழும் நீக்ரோ மக்களின் வளர்ச்சி குறித்து மட்டுமன்றி ஆபிரிக்கா நீக்ரோ மக்களின் சுதந்திர பூமியாக விளங்க வேண்டும் என்ற இலக்குடன் பொப் மார்லி செயற்படத் தொடங்கினார்.

உலக நாடுகளில் இன்னல்களை அனுபவித்துவரும் நீக்ரோ மக்களின் விடிவிற்காக பாடல் ஒன்றையும் பொப் மார்லி பாடியுள்ளார்.

இரண்டாயிரம் ஆண்டுகள் கொண்ட வரலாற்றை அவ்வளவு சீக்கிரம் அழித்துவிட முடியாது இரண்டாயிரம் ஆண்டுகள் கொண்ட கருப்பின மக்களின் வரலாற்றை அவ்வளவு சீக்கிரம் அழித்துவிட முடியாது "Zion Train' என்ற பாடலில் கருப்பின மக்களில் வரலாறு தொடர்பாக பாடியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் "Black Surviour', "Bady Lon System' ஆகிய பாடல்கள் மூலம் வெள்ளையர்கள் கருப்பின மக்களின் உழைப்பையும் உரிமைகளையும் சுரண்டுகின்றனர் என்றும், அதற்கு எதிராக எழவேண்டும் என்றும் பொப் மார்லி மக்களிடம் விண்ணப்பித்துள்ளார்.


## மரணப் படுக்கையில் பொப்மார்லி:

புற்றுநோயால் இறந்த பொப் மார்லி தன்னுடைய மரணக் கட்டிலில் இருந்தபோது மகனிடம், பணத்தால் வாழ்க்கையை வாங்க முடியாது என்றும் On your way up, take me up. On your way down, don't let me down. என்றும் தெரிவித்தார். 1981ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி பொப் மார்லி தனது 36ஆவது வயதில் அமெரிக்காவின் மியாமி நகரிலுள்ள வைத்தியசாலையொன்றில் மரணமடைந்தார்.

ஜமேக்கா மக்கள் பொப் மார்லியை ஒரு விடுதலைப் போராளியாகவே என்றும் கருதினர். 1981ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி இறுதிக் கிரியை அரச மரியாதையுடன் நடத்தப்பட்டு மார்லியின் பிறந்த இடமான நைன் மைல் பகுதியில் உடல் புதைக்கப்பட்டது. அத்தோடு, அவரது பிறந்த தினமான பெப்ரவரி 6ஆம் திகதி ஜமேக்காவில் தேசிய விடுமுறை தினமாக அரசால் 1990ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. ஜமேக்காவின் நைன் மைல் பகுதியில் பொப் மார்லி வாழ்ந்துவந்த வீடு பின்னர் மார்லியின் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டது.

2018-ம் ஆண்டு ஃபோர்ப்ஸ் (Forbes) இதழ் வெளியிட்ட தகவலின்படி, அதிக வருமானம் ஈட்டும் இறந்த பிரபலங்களின் பட்டியலில் பொப் மார்லி ஐந்தாவது இடத்தில் இருப்பதாக அறிவித்துள்ளது. கடந்த இருபது ஆண்டுகளில் மட்டும் பொப் மார்லியின் ஆல்பங்கள் 75 மில்லியனுக்கும் அதிகமாக விற்றுள்ளமை பொப் மார்லியின் இசைத் திறமைக்கு வரலாற்றுச் சாட்சியாகும்.






# அடிமைமுறை எப்போது உருவாகியிருக்கும்?

உலக மக்களிடையே அடிமைத்தனம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தவும் , அடிமைத்தனத்தால் சமுதாயத்தில் உண்டாகும் தாக்கங்களை எடுத்துரைக்கவும் ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி சர்வதேச அடிமைகள் ஒழிப்புத் தினமாக கடைபிடிக்கப்படுகின்றது . 1949 ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் திகதியன்று ஆள்கடத்தலை இல்லாமலாக்குதல் மற்றும் பிறர் விபச்சாரத்திற்கு உள்ளாக்கப்பட்டு சுரண்டப்படுவதை தடுக்கும் முகமாக உருவாக்கப்பட்ட உடன்படிக்கையினை ஐக்கிய நாடுகள் சபையின் பொது அவையில் ஏற்றுக்கொள்ளப்பட்டத்தினை குறிக்கும் முகமாக இத்தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ஆண்டுதோறும் walk free foundation எனும் அமைப்பால் உலக அடிமைத்தன குறியீடு (global slavery index) வெளியிடப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மனித குலம் தோன்றியபோது பொதுவுடமை சமூகமாக வாழ்ந்து வந்த மனிதன் எப்போது குழுகுழுவாகப் பிரிந்து வாழத் தொடங்கினானோ, அப்போதிருந்தே உணவுக்கான தேவையில் குழுக்களாக மோதிக்கொண்டான். இயற்கை வளங்களை பயன்படுத்திக் கொள்வதில் போட்டி ஏற்பட்டபோது போட்டியில் தோற்ற ஆண்கள் கொல்லப்பட்டனர். அவர்களைச் சார்ந்த பெண்களை வெற்றி பெற்ற குழுவினர் கொண்டு சென்றனர்.

பின்னாளில் தோற்றவர்களைக் கொன்று குவிக்காது தங்களுக்கு வேலை செய்வதற்காகவும், பெண்களை பாலியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளவும் வென்றவர்கள் வைத்துக்கொள்ள முற்பட்டதிலிருந்தே இந்த அடிமை முறை உருவாகியிருக்கலாம். இந்த மனிதாபிமானமற்ற அடிமை முறை வரலாற்றுக் காலம் முதல் பல நாடுகளில் நடைமுறையில் இருந்திருக்கிறது. அந்தக் காலத்தில் அடிமைகள் என்பவர்கள் மனிதநேயம் சிறிதும் இல்லாமல் அவர்களின் எஜமானர்களால் நடத்தப்பட்டனர்.



கல்வெட்டுகள் மூலம் அடிமை முறை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களிலே காணப்பட்டுள்ளது எனத் தெரிய வந்திருக்கிறது. புராதன எகிப்தியர் போர்களில் தோற்றவர்களையும், மற்றவர்களிடமிருந்து விலைகொடுத்து வாங்கியவர்களையும் அடிமைப்படுத்தி இருக்கிறார்கள். அடிமைகள் முதலில் அரச குடும்பத்துக்கு சொந்தமாக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு அடிமைகளை பரிசாக கொடுக்கலாம். இந்த அடிமைகளை கொண்டு கடுமையான வேலைகளை வாங்கிக் கொள்ளலாம்.

யூத இனம், எகிப்து, கிரேக்கம், அரேபியா, சீனாவிலும் அடிமை முறை பெரும்பங்கு வகித்திருக்கிறது. இதில் கொடுமை என்னவென்றால் அடிமைகள் சந்தையில் விற்கப்பட்டனர். அடிமைக்குப்



பிறந்தவர்களும் அடிமைகளே. பழங் காலத்தில் ஏதென்ஸில் 21,000 மனி தர்களும் அவர்களுக்கு சேவை செய்ய 4,00,000 அடிமைகளும் இருந்திருக் கிறார்கள்.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி இரண்டாம் நூற்றாண்டு வரை அடிமைகள் மக்கள் தொகையில் மூன் றில் ஒரு பங்கு இருந்திருக்கிறார்கள். இவர்களுக்கு பெயரில்லை, அவர்க ளுக்குத் திருமணம் கிடையாது. சொத்து இருந்தால் பறிமுதல் என பல கொடுமை கள் நடந்தேறி இருக்கின்றன. வசதி படைத்த கிரேக்கர்கள் பத்து, இருபது அடிமைகளை கூட வைத்திருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன.

கிரேக்க அடிமைகளுக்கு தமக்கு இஷ்டமான பெயரைக்கூட வைத்துக் கொள்ளும் உரிமை மறுக்கப்பட்டு, ஏஜமானர்களே தம்முடைய அடிமை களுக்கான பெயர்களை வைத்திருக் கிறார்கள். பண்டைய இந்தியாவில் ராஜாக்களும், வசதி படைத்தவர்க ளும் ஆண்களையும், பெண்களையும் விலைக்கு வாங்கிக் கோவில்களுக்கும், மடங்களுக்கும் தானமாக வழங்கியுள்ள



னர். அடிமை விற்பனை, ஓலையில் பத்திரம் போல் பதிவு செய்யப்பட்டது.

இது ஆளோலை, ஆள்விலைப் பிரமாண இசைவுத் தீட்டு, அடிமை விற்பனைப் பத்திரம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த அடிமை தீண்டா அடிமை என்றழைக்கப்பட்டார். அடிமை கள் மீது ஆடு, மாடுகளுக்கு இடுவது போல் இலச்சினை பொறிக்கப்பட்டன. அரண்மனை அடிமைகளுக்குப் புலிச் சின்னம், சிவன் கோவில் அடிமைக ளுக்கு திரிசூலச் சின்னம், வைணவ கோவில் அடிமைகளுக்குச் சங்குச் சின்னம் இடப்பட்டன.

மத்திய காலத்தில் அடிமை வியா பாரம் புதுப் பரிமாணம் எடுத்தது. ஐரோப் பியர்கள் ஆபிரிக்கர்களை அடிமை களாக்கி வணிகம் செய்திருக்கிறார்கள். ஆப்பிரிக்காவில் பல இன மக்கள் வாழ்ந் தனர். இரு இனங்களுக்கிடையே போர் ஏற்பட்டு அதில் வென்றவர்கள், தோல்வி அடைந்தவர்களை ஆபிரிக்கா மற்றும் அமெரிக்காவுக்கு அடிமையாக விற்றனர்.

அடிமை வியாபாரம் செய்து வந்த வர்கள் கொடுத்த பணத்திற்கு ஆசைப் பட்டு தன் இனத்தவர்களை பிடித்துக் கொடுத்தவர்களும் இருந்திருக்கிறார் கள். அடிமை வியாபாரம் நடத்த மேற்கு ஆபிரிக்கக் கடற்கரையோரங்களில் சில கோட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவர்கள் அமெரிக்க நிலச்சுவான்தார்க ளுக்கு விற்கப்பட்டனர்.

இப்படி அடிமைகளாக விற்கப்பட் டவர்கள் வெள்ளையர் நிலங்களில் சம்பளம் எதுவும் இல்லாமல் உழைத்து தங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடு படாமலேயே வாழ்நாளைக் கழித்தி ருக்கிறார்கள். ஐரோப்பியர்கள், அடிமை முறையை ஓர் உற்பத்தி முறையாக உலக பொருளாதாரத்தின் முக்கியமான அங்கமாக மாற்றினார்கள். உலகிலிருந்த அனைத்து அடிமை முறைகளுடனும் ஒப்பிடும் போது ஐரோப்பியர்களின் அடிமை முறை மிகவும் மோசமான முறையாக வர்ணிக்கப்படுகிறது.

பல நூற்றாண்டுகளாக அடிமை முறை தொடர்ந்தி ருக்கிறது. அடிமை முறையால் சுமார் 6 கோடி ஆபி ரிக்கர்கள் கொல்லப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது. பல கோடி அடிமைகள் சித்திரவதை, நோய், மனத் துயரத்தால் மரணத்தை தழுவி இருக்கிறார்கள்.

மதங்களும் மன்னர்களும் அடிமைகளை நல்ல முறையில் நடத்தக் கோரினாலும், 18- ம் நூற்றாண் டின் பின் பகுதியில்தான் அடிமை முறையை மொத் தமாக ஒழித்து கட்டுவதற்கான குரல்கள் எழுந்தன. இவை முதலில் இங்கிலாந்தில் வில்லியம் வில்பர் போர்ஸ் என்பவரால் பிரசாரம் செய்யப்பட்டன.

இவர் 1787-ல் ஆரம்பிக்கப்பட்ட அடிமை ஒழிப்பு குழுவின் முதல் தலைவர். பிரெஞ்சுப் புரட்சியின் போது முதல் குடியரசு பிரகடனம் செய்யப்பட்ட பின், அடிமை



முறை தடை செய்யப்பட்டது. மாவீரன் நெப்பொலியன் தலைவராக ஆனவுடன், அடிமைத் தனத்தின் பல தடைகள் நீக்கப்பட்டன. 19- ம் நூற்றாண்டில் பல நாடுகள் அடிமை முறையை தடை செய்து ஒழித்தன.

20ம் நூற்றாண்டில், ஐ.நா. சபை, சர்வதேச தொழி லாளர் அமைப்பு போன்றவை, பழைய மற்றும் தற்கால அடிமைத்தனத்தை தடுப்பதற்கு பல சட்டங்களை இயற்றியுள்ளன. ஓரிரு நாடுகளை தவிர, எல்லா நாடுக ளிலும் அடிமைமுறை வெளிப்படையாகத் தடை செய் யப்பட்டுள்ளது. இருந்தாலும் அடிமை முறை பூரணமாக ஒழிக்கப்பட்டுவிட்டது என்று சொல்வதற்கில்லை.

குறிப்பாக, ஏழைத் தொழிலாளர்கள், பணக்கார முதலாளிகளிடம் அடகு வைக்கப்படுவது இன்றும் நடக்கிறது. இன்றும் உலகம் முழுக்க சுமார் 13 கோடி சிறுவர்கள் தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வரு கிறார்கள். இது அடிமை முறையின் நவீன வடிவமாக இருக்கிறது. வீட்டு பணிப்பெண்களும் இதில்தான் அடக்கம்.

# சிதிலங்களுக்கு இடையே பூத்துச்சொரியும் மலர்கள்!!




கவிதாயினி பிரபா அன்பு, அசாத்தியமாக வாழ்வை இலக்கியப் படுத்தும் கவிதைப் போராளி. வெறும் காகிதப் போராளியாக மட்டுமல்லாது களப்போராளியாகவும் வாழ்வில் சுழன்றவர். இன அழிப்புப் சூறாவளியின் போது, உறவுகளையும் உடைமைகளையும் இழந்துவிட்டு, தனது பீனிக்ஸ் குணத்தால் தன்னைப் புனரமைத்துக் கொண்டு இயங்குகிறவர்.

கவிதை, பாடல், சிறுகதை என்று படைப்பின் பல தளங்களிலும் பயணிக்கிறவர். கொத்துக்குண்டுகளிடம் இருந்து தப்பிப் பிழைத்த தன் நாட்களை, சமூகத் தொண்டிற்காக ஒப்படைத்துக் கொண்டிருக்கிறார் இவர்.

தனது காயங்களுக்கிடையில் பூத்த கவிதை மலர்களை எல்லாம் இந்த நூலில் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்.

எனவே, இது ஈரமும் வீரமும் செறிந்த கவிதைத் தொகுப்பாக இதயத்தைக் கவர்கிறது. இவருடைய கவிதைகள், நம் மனதிற்குள் இறங்கி அழகிய அணிவகுப்பை நடத்துகின்றன.

ஒவ்வொரு கவிதையின் கையிலும் இசைக் கருவிகள் இருக்கின்றன. அவற்றின் உணர்விசை உள்ளத்தைக் கொள்ளையடிக்கின்றன.

இதிலுள்ள 50 கவிதைகளும் ஈழ மண்ணிற்கே நம்மை அழைத்துச் சென்று, போர்க்களத்தில் நடுவே நிறுத்தித் திக்குமுக்காடவும் வைக்கின்றன.

பக்கத்திற்குப் பக்கம் பெருமூச்சும் கண்ணீரும் வலியும் வேதனையும், மரணக் கூக்குரலும், கொத்துக் குண்டுகளின் ஓசையும், வீசப்பட்ட வெடிப் புகையும் எழுந்தபடியே இருக்கிறது. இருப்பினும் கட்டிச் சிதிலங்களுக்கு நடுவில் முளைவிட்டுத் தழைக்கும் வீரியத் தாவரத்தைப் போல், இவரிடம் இருந்து கவிதை மலர்கள் பூத்துச் சொரிகின்றன.

*‘உதிர்ந்துகிடக்கும் சாலையோரத்துப்*
*பூவைப் போல*
*நிராசையான கனவுகளுடன் வாழ்கிறேன்’*

–என்கிற வரியே போதும், இவர் சுமந்திருக்கும் அனுபவ வலிகளை உணர. எனினும், ஈழ மண்ணிற்கே உரிய போர்க்குணம் இவரது பெரும்பாலான கவிதைகளில் வெளிப்பட்டு நிமிரவைக்கிறது.

*‘புனிதமான பூமியில் மீண்டும் பிறப்பெடுத்து*
*குறுநிலம் ஒன்றின்*
*குதிரைப் படைக்குத் தளபதியாவேன்’*

–என்கிற இவரது சூளுரை திகைக்க வைக்கிறது. இவரிடம் போர்க்களமன்றி வேறொரு வண்ணக் கனவு இல்லை. சொகுசுக்கு ஏங்கும் இயல்பான ஆசை கொஞ்சமும் இல்லை. மீண்டும் பிறந்து களமாட வருவேன் என்கிற இந்த வரிகள், இவரது மரபணுக்களில் தமிழ்வீரம் படிந்திருப்பதை உணர்த்துகிறது.

ஈழத்தின் கலவர நிலைவரம் பற்றி...

*‘கொத்துக் குண்டின் வெளிச்சத்தில்*
*பதுங்கு குழி போகும் முன்பு*
*கண்முன்னே பல பிணங்கள் குவிந்திருக்கும்...’*

–என்றெல்லாம் பிரபா, படம் பிடிக்கும் போது, நம் முதுக்குத்தண்டு சில்லிடுகிறது. மரணத்திற்கு நடுவே சிக்கியிருந்த ஈழத் தமிழர்களின் துயரம் நெஞ்சைக் கனமாக்கி ரணமாக்குகிறது. அதிலும் சோகத்தில் கொடிது புத்திர சோகம் என்பார்கள். அதன் ஒட்டுமொத்த படையெடுப்பையும் எதிர்கொண்டிருக்கிறது இவரின் இலக்கிய இதயம்.

*‘என் மூன்று முத்துக்களே*
*உயிர்குடிக்கும் எறிகணைக்கு*
*உங்களை நான் பறிகொடுத்து*
*இன்றோடு 13 வருடங்கள் ஆனதுவே..’*

–என்கிற அவரது துயர வெளிப்பாட்டுக் கவிதைக்குள், சொற்களே உருண்டு புரண்டு அரற்றுகின்றன. இந்தக் காயத்திற்கான மருந்து, காலத்தைத் தவிர எவரிடமும் இல்லை. சகோதரத்துவ ஆறுதல் அன்றி அவருக்குத் தர நம்மிடம் ஏதும் இல்லை.

இப்படியெல்லாம் இருளுக்குள் திணறியபோதும், உள்ளம் கொண்டாடிய அற்றை நாள் அன்புத் திருவிழாவை மறக்க முடியுமா?

ஆசையாய் உயிர்குடித்த அந்தக் கண்களைக் கடந்து சென்றுவிட முடியுமா? அமுதம் அருந்திய சுவையின் இனிப்பு, எந்தக் கசப்புக்கு நடுவிலும் உயிர்வாழ்வது போல, கவிஞருக்குள் அன்றைய காதல் நினைவுகளும் கவிதையால் சடுகுடு ஆடுகின்றன.

இருப்பினும், அந்தக் காதல் நினைவுகள்... உச்சத்தலையில்

# சிதிலங்களுக்கு இடையே பூத்துச்சொரியும் மலர்கள்!!

முத்தமிட்டு உருகவில்லை. ஆறுதல் அணைப்பை அருளவில்லை. தோளணைந்தும் துணையென நிற்கவில்லை. ஏனெனில் அன்றைய சூழலில் ஈழக் காதலர்களுக்கு, அவர்தம் காதலும் கூட ஒவ்வொரு நொடியும் செத்துச் செத்துப் பிழைத்தது. அதனால்தான்...

*'என் தனிமைகள் உன் நினைவுகளால்*
*அலங்கரிக்கப்பட்டவை.'*
– என்கிறார் பிரபா.

இப்படி நினைவின் அழகை ரசித்தபடியே, நம் பக்கம் உருண்டுவரும் கவிஞரின் அக உலகம், அடுத்தடுத்து தனிமையிலும் பிரிவிலும் துயரிலும் இழப்பிலுமே நகர்கிறது. ஏன் இப்படி?

*'போராளியை நேசிப்பவளுக்குத்*
*தலையணைதான் தலைவனாம்'*

–என அதற்கும் காரணம் சொல்கிறார். இந்த வரிகள் இதயத்தை அறைந்து நிதர்சனத்தின் வலியை நமக்குக் கடத்துகிறது. இது ஏறத்தாழ அங்கிருந்த அத்தனை பெண்களுக்கும் எழுதப்பட்டிருந்த கண்ணீர்ச் சாசனம் அல்லவா?

காதலர்கள் சந்திக்கும் போதே அவர்களின் கைகளைப் பிரிவின் கைகள் பிடித்து இழுக்கும் கொடுமையும் அரங்கேறும்.

சங்க இலக்கியத்தில் நற்றிணைக் காதலி ஒருத்தியின் மிக உயர்ந்த உன்னதமான புலம்பல் இது.

*'சாதல் அஞ்சேன் அஞ்சுவல், 'சாவின்*
*பிறப்புப் பிறிதாகுவதுஆயின்,*
*மறக்குவேன்கொல், என் காதலன் எனவே.'*

–சாவைக் கண்டு அஞ்சாத நான், இறப்பின் பின் வேறொரு பிறவி எடுக்க நேர்ந்தால், அவனை மறக்க நேருமோ என்பதால்தான் சாவைக்கண்டு அஞ்சுகிறேன் என்று அவள் மருகி மருகி உருகுகிறாள். அவளைப் போலவே நம் பிரபா அன்புவின் கவிதையும்...

*'மரணத்தின் வாசனை*
*என்னைத் துரத்திய போது*
*உன்னைப் பிரிந்துவிடுவேனா? என்ற*
*ஏக்கத்தில் கால்கள் இடற*
*கன்னக்குழியோரம் ஊடுருவி வழியும்*
*நீரைத் துடைத்தபடி ஓடிவந்தேனே'*

–என்று பதறுகிறது. மரணத்தைவிடவும் அன்புக்குரியவனைப் பிரிவது பெருங்கொடுமை என்று எண்ணும், இத்தகைய அன்பிற்கு எத்தனை கோயில் வேண்டுமானாலும் கட்டலாம்.

காதலுக்குரியவனின் நினைவுகள் எத்தகையது?

'பிரம்ம போதை உந்தன் நினைவுகள்' என்கிறார் பிரபா. இது மகிழ்வின் வெளிப்பாடோ என்று நாம் நினைத்தால்...

*'தென்றலோடு கலந்து*
*உன் கல்லறை தழுவட்டும்*
*பரிபாசையில் நான் அனுப்பும்*
*அன்பின் மொழிகள்.'*

–என்று அடுத்துத் தொடரும் வரிகள், நம் கண்களையும் கசியச் செய்துவிடுகின்றன. உடலைக் காயம் என்பார்கள். அதனால்தான் 'காயமே இது பொய்யடா' என்று பாடினார்கள். ஆனால் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் வாழ்வே காயம்தான். எனவே இந்த இருளுக்குள் இருந்தபடியே...



*'மொழிகள் பேசாது*
*வலிகள் சுமக்கும் பல மனங்கள்*
*ஓர் நாள் இத்தேசத்தில்*
*சுதந்திரச் சிட்டுகளாக*
*இறகை விரிக்கவேண்டும்.'*

–என்கிற நம்பிக்கைச் சுடரையும் கவிதையின் திரியில் இவர் ஏற்றிவைக்கிறார்.

பிரபா அன்புவின் கவிதைகள் ஈழ இலக்கியத்தில், ஒரு அடர்ந்த பதிவாக அமைந்திருக்கின்றன. பெண்ணியப் பார்வையில் பதிவு செய்யும் போது, அவற்றின் உணர்வலைகள் பன்மடங்காகப் பெருகி பன்மடங்குப் பரிதவிப்பை ஏற்படுத்துகின்றன.

ஈழ இலக்கிய வரலாற்றை இனி எழுதுகிறவர்கள், பிரபா அன்புவைத் தவிர்க்க முடியாது. ஏனெனில் ஈழத் தமிழர்களின் ஒட்டுமொத்த வாழ்வையும் எதிரொலித்து எதிரொலிக்கும் மொழி இவருடையது.

இந்தத் தொகுப்பு ஈழ வாழ்வியலின் கல்வெட்டுக் குரல்.

பிரபா அன்பு, சங்ககால ஔவைக்குச் சமமானவர். அறிவும் உணர்வும் சம பங்காய் கலந்த இலக்கியக் கலவை இவர்.

இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு இவரது கவிதைகள், வீறுகுறையாமல் நடைபோடும்.

இனிய வாழ்த்துக்களோடு,

**ஆரூர் தமிழ்நாடன்**



# கடமையே கண்ணான பெண்களே!!

பெண்களே.! PHD பண்றீங்களோ இல்லையோ, பட்டப்படிப்பு படிக்கிறீங்களோ இல்லையோ இதை முதலில் படியுங்கள். வாழ்க்கை வாழவே...! எனவே, வீணாக்காமல் வாழ்ந்துவிடுங்கள்..கேட்பதற்கு சாதாரணமாகத் தெரியும் ஒரு சம்பவம் இதைக் கேளுங்கள்

எங்கள் தோழி... அவள் 50 வயதைக் கடந்தவள்.. அவள் பிறந்த நாள் முடிந்து சரியாக எட்டு நாட்கள் கழித்து, வாட்சப் குழுமத்தில் அவளின் மரண செய்தி பதிவைப் பார்த்தோம். பேரதிர்ச்சி எங்களுக்கு..!

அவளது கணவன் ஊர் ஊராக பயணம் செய்யும் தொழிலில் இருப்பவர்..

அதனால் வீட்டின் அத்தனை பொறுப்புக்களையும் அவள்தான் பார்த்துக் கொண்டாள்.. பிள்ளைகளின் படிப்பிலிருந்து, வீட்டிற்கு சாமான்கள் வாங்கி வருவதிலிருந்து, அவளின் வயதான மாமியார் மாமனாரைப் பார்த்துக் கொள்வதிலிருந்து, வீட்டிற்கு வரும் விருந்தாளிகளை சமாளிக்கும் வரை அத்தனையையும், அத்தனையையும் அவள்தான் ஒருத்தியாக பார்த்துக் கொண்டாள்.

எப்போதாவது பேசும் சந்தர்ப்பம் அமைகையில்,

என் குடும்பத்திற்கு அவசியம் நான் தேவை, எனது நேரம் தேவை, என் கணவருக்கு தேநீர் கூட தயாரிக்கத் தெரியாது, நான் இல்லை என்றால் அவர்கள் தடுமாறிப் போவார்கள்...ஆனால், இவ்வளவு செய்தும் எனக்கு எந்தப் பாராட்டும், எந்த அங்கீகாரமும் கிடைப்பதில்லை' என்று சொல்லுவாள்.

அதில் தொனித்த வேதனையை எங்களால் இனம் காண முடிந்தது..

அவள் இறந்து ஒரு மாதமாயிற்று...பாவம் அவள் கணவர்! இப்போது எப்படி சமாளிக்கிறாரோ? பயணம் செய்யும் பணியில் இருந்து கொண்டு பிள்ளைகளை, தன் வயதான தாய் தந்தையரை எப்படி கவனிக்கிறாரோ என வருத்தம் தோன்ற, எதாவது உதவி செய்ய முடிந்தால் செய்யலாம் என அவரை அலைபேசியில் அழைத்தேன்.

பதிலில்லை. அரை மணி கழித்து அவரே அழைத்து, தான் நண்பர்களுடன் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்ததாகவும், அப்படியே அவர்களுடன் பேசிக் கொண்டிருந்ததாகவும், அதனால்தான் உடன் அழைப்பை ஏற்க முடியவில்லை எனவும் சொல்லி மன்னிப்புக் கோரினார்.

எப்படி இருக்கிறீர்கள்? என்றேன்.

பயணம் செய்யும் பொறுப்பிலிருந்து மாற்றல் வாங்கிக் கொண்டு, ஊரிலிருந்தே வேலை செய்யும் பொறுப்பிற்கு மாற்றிக் கொண்டிருக்கிறாராம்..

வீட்டில் எல்லோரும் எப்படி இருக்கிறார்கள்? எனக் கேட்டேன்.

சமையல் செய்வதற்காக ஒருவரை நியமித்து அவரே கடையிலிருந்து பொருட்களை வாங்கி வருமாறும் பணித்திருக்கிறாராம்..தன் தாய் தந்தையரை பார்த்துக் கொள்ள செவிலியர்களை நியமித்திருக்கிறாராம்..

பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள்? எனக் கேட்டேன்..

'பிள்ளைகள் நலம்.. நான் பார்த்துக் கொள்கிறேன். கொஞ்சம் கொஞ்சமாக எல்லோரும் சுமுக நிலைமைக்கு திரும்பி கொண்டிருக்கிறோம்..' என்றார்..

சிறிது நேரம் பேசிவிட்டு, முடித்தேன். என் கண்கள் குளமாகியது.

என் தோழி நினைவிற்கு வந்தாள். பள்ளி தோழிகள் சந்திப்பிற்கு அவள் வரவில்லை, காரணம் அவள் மாமியாருக்கு உடல் நிலை சரியில்லை.

அவளின் அண்ணன் மகள் திருமணத்திற்கு அவளால் போக முடியவில்லை, காரணம் அவள் வீட்டில் திருத்த வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

எங்கள் தோழியின் மகள் திருமணத்திற்கு வரவில்லை, காரணம் அவள் பிள்ளைகளுக்கு தேர்வு.. நாங்கள் அனைவரும் இணைந்து சென்ற திரைப்படத்திற்கு அவள் வரவில்லை, காரணம் இரவு உணவு சமைக்க வேண்டும்.. இப்படி எத்தனை இனிமையான தருணங்களை அவள் இழந்திருக்கிறாள்..



அவளுக்காக அவள் வாழவே இல்லை.. மற்றவர்களுக்காக மட்டுமே வாழ்ந்திருக்கிறாள்.. இத்தனை செய்தும் கூட இறுதி வரை அவள் எதிர்நோக்கிய பாராட்டும் அங்கீகாரமும் அவளுக்குக் கிடைக்கவே இல்லை.

இப்போது வாழ்க்கையை இலகுவாக்க எல்லாவற்றிற்கும் ஒழுங்குகள் செய்திருக்கும் அவள் கணவர் இவற்றை முன்பே செய்திருந்தால்?? அவளுக்கும் வாழ்க்கையில் இனிமையான தருணங்கள், தனக்கான ஒரு நேரம் இருந்திருக்கும். இல்லையா? சம்பளமில்லாத வேலைக்காரியாக அவள் ஓடாகத் தேய்ந்து மாண்டிருக்கத் தேவை இருந்திருக்காது. இல்லையா?

இப்போது அவளிடம் சொல்லத் துடிக்கிறேன். இந்த உலகத்தில் யாரும் இன்றியமையாதவர்கள் அல்லர். யாரை இழந்தாலும் அவரைச் சார்ந்திருப்போர் சிறிது நாட்களிலேயே அவரின்றி வாழப் பழகி விடுவார்கள்.

தன்னைப் பார்த்துக் கொள்வதுதான் அவளது முதல் கடமை என மற்றவர்கள் நினைப்பதும், அவளும் அவர்களுக்கு முதல் உரிமை கொடுத்து விட்டு இரண்டாவதாக தன்னைப் பார்த்துக் கொள்வதும், நான் இல்லை என்றால் என் வீடு தடுமாறி விடும் என்றெல்லாம் நினைப்பதும் நம் மனதின் அறியாமை..

அப்படி நினைத்த எனது நண்பி.. ஒரு நாள் கூட அவள் அவளுக்காக வாழவில்லை.. இதையெல்லாம் சொல்வதற்கு அவள் இப்போது உயிருடன் இல்லை...

தோழிகளே...!!


எத்தனை பொறுப்புகள் இருந்தாலும், எத்தனை பணிகள் இருந்தாலும் உங்களுக்கென்று ஒரு நேரத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.. அது உங்கள் நேரம்.. உங்களுக்குப் பிடித்ததைச் செய்யுங்கள்.. ஆடுங்கள், பாடுங்கள். உங்களுக்கு என்னவெல்லாம் பிடிக்குமோ அத்தனையும் செய்யுங்கள். பள்ளி, கல்லூரித் தோழிகளிடம் பேசுங்கள், மனதிலுள்ளதைப் பகிருங்கள், சிரியுங்கள்..சந்தோசமாக இருங்கள்.

வாழ்க்கையை அனுபவியுங்கள். இது உங்கள் வாழ்க்கை. உங்களுக்கான வாழ்க்கையை வாழுங்கள். உங்களுக்கான இன்பத்தை மற்றவர்களுக்காக தொலைத்து விடாதீர்கள். நீங்கள் மகிழ்வாய் இருந்தால் மட்டுமே, மற்றவர்களை மகிழ்விக்க முடியும்..

இறுதியாக ஒரே ஒரு வார்த்தை..வாழ்க்கை ஒரே ஒரு முறை தான்...

**அனுபவித்து வாழுங்கள்.**
**வாழ்க்கை மிகவும் அழகானது.**





# பெண்மையைப் போற்ற நாளொன்று போதாது!!

அரைப் பக்கம் என்ன?
ஒரு முழுப் பக்கம்
கூட எழுத முடியும்.
சொல்லப் போனால்
பக்கங்கள் காணாது
உன்னைஎழுத!!

வியாசன் உன்னை வைத்து
மகா பாரதம் எழுதிவிட்டான்!
வால்மீகி தன் பங்குக்கு
ராமாயணம்
பாடிவைத்தான்!

போட்டியில்
நான் சளைத்தவன்
இல்லையென
கம்பனும்
காவியம் எழுதிவிட்டான்!

புதுமைப்பெண்பெண்மை
பெண்விடுதலை என
பாரதியும் பா
சமைத்தான்
அவன்பங்குக்கு!

எல்லோரும்
பங்கெடுத்து எழுதியதை
நான் எழுதினால்.
வேண்டாம் என்று
யாரேனும் சொல்வார்களா?

இதிகாசங்கள் பெற்ற உரு
எல்லாவற்றிலும்
நீயே கரு!!

கவிதையில் நீ!
கதையில் நீ!
காவியத்தில் நீ!
ஓவியத்தில் நீ!!

கடவுள் இல்லை நீ
ஆனாலும்
நீயில்லையெனில்..?

இவ்வுலகில் உயிரில்லை!!
மகளிர்தினவாழ்த்துக்கள்.

**சேகர்** (இந்தியா)



கந்தசாமி அபிலாஷ்

# சர்வதேச சமூகத்தில் பெண்கள்

21 ம் நூற்றாண்டில் மாறிக் கொண்டிருக்கும் அதீத தொழில் நுட்ப மாற்றங்களுடன் கூடிய இன்றைய காலகட்டத்தில், உலகில் மனிதனைப் படைக்கும் சக்தி சொரூபமாகவும், கண்ணில் பட்ட தெய்வமாகவும், வாழும் கடவுளாகவும் நம் முன்னோர்களால் என்றும் பெண்கள் போற்றப்பட்டு வருகின்றனர். கலை, அரசியல், கல்வி, பொருளாதாரம், கலாசாரம், விளையாட்டு, விஞ்ஞானம், கண்டுபிடிப்பு முதலான துறைகளில் வெவ்வேறு நிலைகளில் சாதனை படைத்து வருவதுடன் சர்வதேச சமூகத்தில் பெண்கள் தனக்கென உறுதியானதும், நிலையானதும், விவேகமானதுமான இடங்களைப் பிடித்துள்ளனர்.

சட்டங்கள் ஆள்வதும் பட்டங்கள் வெல்வதுமான பாரதியின் புதுமைப் பெண்கள் உருவாகிக் கொண்டிருப்பது மட்டுமன்றி குடும்பம், பதவி, கௌரவம், பாரம்பரியம் என அனைத்தையும் பேணி வருகிறார்கள். பெண்களே நாட்டின் கண்கள், நம்மைப் பெற்றவள் பெண், நமது சந்ததியை விருத்தி செய்பவள் பெண், நமக்கு சகோதரியாய் நல்ல உறவாக இருப்பவளும் பெண். இத்தகைய பெண்கள் இன்று சாதிக்காத துறைகளே இல்லை எனக் கூறும் அளவிற்கு அனைத்துத் துறைகளிலும் சாதித்து வருகிறார்கள்.

வளர்ச்சிப் பாதையில் சமுதாயத்தை அழைத்துச் செல்லும் பெண்கள் பாதுகாப்போடு நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். இதற்காக, பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் அவர்களது நல்வாழ்வை மேம்படுத்தும் பொருட்டு உலகளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில், 1978ம் ஆண்டு முதல் மகளிர் தினக் கொண்டாட்டம் இடம்பெற்று வருகிறது. அதன் பின்னர் ஒவ்வொரு வருடமும், வெவ்வேறு கருப்பொருளை மையப்படுத்தி கொண்டாட்டம் இடம்பெற்று வருகிறது. இலங்கை தற்போது பல்வேறு சமூக மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள போதிலும், நாட்டிலுள்ள பெண்கள் தொடர்ச்சியாக வலிமை மற்றும் மீளெழுச்சித் தன்மையை வெளிப்படுத்தி முன்னோக்கி பயணிப்பதன் மூலம், மரியாதையையும் பாராட்டையும் பெறுகின்றனர். அந்த வகையில், இவ்வருட மகளிர் தினமானது இலங்கைப் பெண்களின் குறிப்பிடும்படியான சாதனைகளைக் கௌரவிக்கும் பொருட்டு 'அவளே தேசத்தின் பெருமை' என்னும் கருப் பொருளில் கொண்டாடப்பட்டது.

இது தொடர்பான நிகழ்வு 2023 மார்ச் 8 அன்று, இலங்கையில் உள்ள பெண்களை வலுவூட்டுவதற்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள சனாதிபதியின் பங்குபற்றுதலுடன், பத்தரமுல்லை என்னுமிடத்தில் நடைபெற்றது. இலங்கைப்



பெண்களின் கருணையையும் நேர்த்தியையும் சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் சாதனைகளை வெளிப்படுத்திய மூன்று ஒப்பற்ற பெண்களுக்கு விருது வழங்கப்படுவது இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக இடம்பெற்றது.

இலங்கைத் தேசத்தின் அபிவிருத்திக்கு பெண்கள் வழங்கும் மகத்தான பங்களிப்பை அங்கீகரித்துப் பாராட்டுவதுடன் அவர்களுக்கு அங்கீகாரமளிப்பது என்பது நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களுக்கும் உத்வேகமளிப்பதாக அமையும். இந் நிகழ்ச்சியில் மாவட்ட ரீதியாக சிறந்து விளங்கும் 25 பெண் தொழில் முனைவோருக்கு அங்கீகாரமளித்து அவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

பெண்கள் மீது காட்டப்படும் பாகுபாடு என்பது மனித உரிமை மீறல்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இந்தப் பாகுபாடு பெண்கள்மீது சுமத்தப்படும் மாபெரும் தடையாகும். பெண்களின் துணையுடன்தான் பல சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அமைதியான குடும்பச் சூழல், பொருளாதார வளர்ச்சி, சீரான முன்னேற்றம் என்பனவற்றிற்கு குடும்பம் முதல் சர்வதேச சமூகம் வரை பெண்களின் பங்களிப்புத் தேவைப்படுகிறது. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புத் துறைகளை வலுப்படுத்த பெண்களின் பங்கு தேவைப்படுகிறது. அந்த வகையில் ஔவையார், அன்னை தெரேசா, ராணி லக்ஷ்மிபாய், சாவித்ரிபாய் பூலே, ஆனந்திபாய் ஜோஷி சரோஜினி, நாயுடு விஜய லட்சுமி பண்டிற், கமலா தேவி சட்டோபத் பாய், நீதிபதி அன்னா சாண்டி, சுசேத்தா கிரிப்லானி, கிட்டூர் சென்னம்மா, பூலான்தேவி, அனுலாதேவி, இந்திரா காந்தி, கல்பனா சாவ்லா என சாதனைப் பெண்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. இது மிகையல்ல. இவ்வுலகில், ஒவ்வொரு பெண்ணும் ஏதோவொரு வகையில் ஆண்களின் வளர்ச்சிக்கும் அவர்களது வெற்றிக்கும் உறுதுணையாக இருக்கிறாள். சாதனைப் பெண்கள் ஏனைய பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் கூட சிறந்த முன்மாதிரிகளாக உள்ளனர். ஆயிரம் கவிஞர்கள் பெண்ணியம் பேசினாலும், பல்வேறு தடைகளைத் தாண்டியே பெண்கள் சமநிலை பெற வேண்டியிருக்கிறது. சீரோடும் சிறப்போடும் நடத்தப்பட வேண்டிய பெண்கள் பல்வேறு வகையான வன்முறைகளுக்கு இலக்காவது கொடுமையானது. உடல், உள, சமூக ரீதியான வன்முறைகளால் பாதிக்கப்படுவதைத் தடுத்து பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய உதவும் சட்டங்கள், விதிகள், கொள்கைகள் சர்வதேச செயலொழுங்கில் உயிர் பெற வேண்டும்.

> **பெண்கள் மீது காட்டப்படும் பாகுபாடு என்பது மனித உரிமை மீறல்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இந்தப் பாகுபாடு பெண்கள்மீது சுமத்தப்படும் மாபெரும் தடையாகும். பெண்களின் துணையுடன்தான் பல சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அமைதியான குடும்பச் சூழல், பொருளாதார வளர்ச்சி, சீரான முன்னேற்றம் என்பனவற்றிற்கு குடும்பம் முதல் சர்வதேச சமூகம் வரை பெண்களின் பங்களிப்புத் தேவைப்படுகிறது.**





கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் இலங்கைப் பெண்கள் கணிசமான முன்னேற்றங்களை அடைந்துள்ள நிலையில், சில பெண்களின் உரிமைகள் இன்னும் மறுக்கப்படுவதையும், அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தப்படுவதையும் தடைசெய்யும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவர்களின் நிலையை மேம்படுத்துவதற்கான நீண்ட கால மூலோபாயத்தைத் தயாரிப்பது தொடர்பான பணிப்புரையை வெளியிட வேண்டியது அவசியமாகும்.

தங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது, பெண்கள் அதிலிருந்து தப்பிப்பதற்கு ஏதுவாக தற்காப்புக் கலைகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். தம்மைத் தற்காத்துக் கொள்ளும் அனுபவ அறிவையும் பெற்றுக்கொள்ள வேண்டும். பெண்களின் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு பரப்பப்பட வேண்டும். அதாவது பெண்கள் பாதுகாப்புச் சட்டம், போக்சோ சட்டம் போன்ற சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வுகளைத் தாண்டி, இச்சமூகத்தில் வாழும் ஒவ்வொரு ஆணும் பெண்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தன்னில் ஒருவராக. எப்பொழுது உணர்கிறானோ அன்றுதான் பெண் மறுமலர்ச்சி உதயமாவது நிச்சயமாகும் என்பதில் எத்தகைய ஐயமுமில்லை.



# 21 ஆம் நூற்றாண்டில் கலப்புத் திருமணங்கள்

உலகமயமாக்கலால் உலகம் சுருங்கிவரும் நிலையில் இன, மதக் கலப்புகளினால் ஏற்படும் திருமணங்கள் தவிர்க்கவியலாத ஒன்றாகிப் போகிறது. இல்லையா? சில வருடங்களுக்குமுன் வெளியான “two states‘திரைப்படத்தினை அநேகர் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அதிலொரு காட்சி வரும் ஒரு பஞ்சாபித் தாயார் தன் மகனிடம்

ஓர் தமிழ்ப் பெண்ணை நீ திருமணம் செய்துகொள்ள நினைப்பதை ஏற்றுக்கொள்ள இயலாது. இப்போதைக்கு காதல் உணர்ச்சி பின்விளைவுகளைப் பற்றி யோசிக்க வைக்காது. ஆனால் இதுவோர் நீண்ட காலப் பிரச்சினைக்கு வழிகோலும்.இனத்தால்,மதத்தால், கலாசார பண்பாட்டால் மாறுபட்ட உங்களுக்குள் கருத்து முரண்பாடு ஏற்படுவதென்பது தவிர்க்கவியலாத ஒன்றாகிப் போய்விடக்கூடும் எனக்கூற, இதற்கு மகன்

அம்மா! நீ என் தந்தையான ஒரு பஞ்சாபிக்காரரைத்தானே திருமணம் செய்துகொண்டாய்? அப்படியிருக்கையில் நீ மேற்சொன்ன இனத்தால், மதத்தால், பண்பாடு, கலாசாரத்தால் ஒன்றுபட்ட உங்களுக்குள் ஏன் தினமும் சண்டையும் முரண்பாடுகளும் நிறைந்த அன்னியோன்யம் அற்ற வாழ்க்கை? எனக் கேட்கிறான்.

ஆம்! இன்றைய சூழ்நிலையில் நாம் ஒவ்வொருவருமே யோசிக்கவேண்டிய கேள்வியிது! ஏனெனில் ஓர் இன, மத கலப்புத் திருமணம் பற்றிய பேச்சுவார்த்தை எழும்போதெல்லாம் நாம் முதலில் தூக்கி நிறுத்துவது இந்த தாயார் சொன்ன விடயங்களைத்தான். ஓர் இந்துப்பெண் ஓர் இந்து ஆணைத் திருமணம் செய்துகொள்ளும்போதோ, ஓர் கத்தோலிக்க ஆண் கத்தோலிக்கப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளும்போதோ ஓர் இஸ்லாமிய ஆணும் இஸ்லாமியப் பெண்ணும் ஓர் பௌத்த ஆணும் பௌத்தப் பெண்ணும் திருமணம் செய்துகொள்ளும்போதோஅவரவர் குடும்பங்களால், சமூகங்களால் “surety‘கொடுக்கப்படும்.

ஓர் ஹிந்துப்பெண்ணும்ஒரு இஸ்லாமிய இளைஞனும்,ஒரு பௌத்த இளைஞனும் கிருஸ்தவ பெண்ணும் என்று மாறிவரும் திருமணங்களில் இத்தகைய surety கொடுக்கப்படுவதில்லை அல்லவா?





ஏன்? எங்கிருந்து முன்னையதில் நம்பிக்கையும் பாதுகாப்புணர்வும் ஏற்படுத்தப்படும் அதே சமயம் பின்னையதில் நம்பிக்கையீனமும், அச்சமும், பாதுகாப்பற்ற தன்மையும் ஏற்படுகிறது? அல்லது உருவாகிறது?

ஏனெனில் திருமணதிற்குப்பின் தம்பதியரிடையே முரண்பாடுகள் எழுவதென்பது சகஜமான ஒன்று. அதற்கு இன, மத, பண்பாட்டுக் கலாசாரம் மட்டும்தான் காரணம் என்றில்லையே?

அரசியல் பிரச்சினைகளாலும் அதனால் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தங்களாலும் மக்கள் புலம்பெயர்ந்து வாழ முற்படுகையில் புதிய சூழ்நிலை, ஆடை மாற்றம், மொழி மாற்றம் போன்ற புற மாற்றங்களுடன் புதிய பண்பாட்டு அம்சங்களை உள்வாங்கிக்கொள்ளும் உள மாற்றமும் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பின்னணியில் நிகழும் இன, மத கலப்புத் திருமணங்கள் சகஜமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. வெளிநாட்டில் ஓர் வெள்ளைக்காரரையோ வெள்ளைக்காரியையோ தம் குடும்ப உறுப்பினர் ஒருவர் மணம்செய்துக்கொள்கையில் அதைக் ‘காலமாற்றம்’ என எங்களால் ஏற்றுக்கொள்ள முடிகிறது.

இதுவும் ஒருவகையான “middle class mind‘. இவ்வகையான கலப்புகளை ஒரு பெருமைக்குறிய விடயமாகவே நமது உள்மனம் ஏற்றுக்கொள்கிறது என்பது நாம் வெளிப்படுத்திக்கொள்ள விரும்பாத உண்மை. உள்நாட்டில் இடம்பெறும் இன, மத கலப்புத் திருமணங்களை அவ்வளவு சீக்கிரத்தில் ஜீரணித்துக்கொள்ள இயலுவதில்லை. அதிலும் கிருஸ்தவ அல்லது சிங்கள கலப்புகளைக்கூட ஒருமாதிரியாக ஏற்றுக்கொள்ளத் துணிகிறவர்கள், இஸ்லாமியக் கலப்பு என்பதனை சாத்தியமற்ற ஒன்றாகவே இன்றுவரை கருதுகின்றனர்.

இந்த முரணுக்குக் காரணம் என்ன? காலங் காலமாக சக மதத்தவர்களது மனதில் கட்டியெழுப்பப்படும் இஸ்லாமிய வெறுப்பு மற்றும் முஸ்லிம்களுக்கும் மேற்கத்தைய அரசுகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகளால் இப்போது ஏற்பட்டிருக்கும் காழ்ப்புணர்வு போன்றன இதற்குக் காரணமாக அமைகின்றன. மேலும், மிக இறுக்கமான மதம் என்பதால் மற்றவர்கள் இஸ்லாமியர்களை ஏற்றுக்கொள்வதைக் காட்டிலும் இஸ்லாமியர்கள் மற்றவர்களை ஏற்றுக்கொள்வதோ அல்லது வளைந்து கொடுப்பதோ இல்லை என்பதும் மற்றுமோர் காரணம்.

காதலிக்கும்போது ‘நான் எனது தனித்தன்மையையும் பண்பாட்டையும் இழந்துவிடுவேனோ’ என்ற அச்சம் இருப்பதில்லை. ஆனால் திருமணதிற்குப்பின் இந்த எண்ணம் விஸ்வரூபம் எடுக்கும். ஏனெனில் அதற்க்குப்பின்தானே மிகப்பெரிய அதிர்ச்சிகளை ஆச்சரியங்களையும் சந்திக்கப்போகிறோம்! ஒரே இனத்தைச் சார்ந்த இருவேறு மதங்களைச்சேர்ந்தவர்கள் திருமணம் செய்யும்போதே பிள்ளைகளை எந்த சமயத்தில் வளர்ப்பது என்ற பிரச்சினை எழுகிறது.

அப்படியாயின் இரு இனங்களை சேர்ந்தவர்கள் திருமணம் செய்யும்போது மொழி, மதம், பண்பாடு என்று பல்வேறு விடயங்கள் பற்றி முடிவெடுக்க வேண்டியிருக்கிறது.யாருடைய பண்பாட்டின் எந்தெந்த அம்சங்களை நாளாந்த நடைமுறையில் ஏற்றுக்கொள்வது?, பிள்ளைகளை எந்த பண்பாட்டில் வளர்ப்பது?, குழந்தைகள் வீட்டில் தாயின் மொழியை பேசுவதா அல்லது தந்தையின் பண்பாட்டை பின்பற்றுவதா? போன்ற பல்வேறு கேள்விகள் எழுகின்றன.

ஏதோவொருவகையில் தம்பதியினர் இருவரும் விட்டுக்கொடுத்து ஒருவரின் பண்பாட்டினை இன்னொருவரின் பகுதியாக ஏற்றுக் கொள்ளாவிடின் இல்லறம் ‘டமால் டுமீல்தான்’ இல்லையா?

சிலர் தமது சமயத்தை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். வேறுசிலர் நாளாந்த வாழ்வின் அம்சங்களை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். சிலர் மொழியை விடவே மாட்டார்கள். எனவே இப்படியான கலப்புத் திருமணங்கள் வெற்றிகரமாக அமைவதற்கு நிறையவே பொறுமையும் பரஸ்பர விட்டுக்கொடுத்தலும் வேண்டியிருக்கிறது .

**இப்படி மாறித் திருமணம் செய்துகொள்பவர்களின் எதிர்காலம் ஒன்றின் ஆதிக்கம் இன்றி இரண்டு பண்பாடுகளுக்கும் இடைப்பட்ட ஒரு நிலையைக் கொண்டதாக இருப்பது எல்லா நேரங்களிலும் சாத்தியப்படக்கூடுமா? உலக மயமாக்கலில் கலப்புத் திருமணம், காதல், என்று வரும்போது பழைய சம்பிரதாயபூர்வமான திருமணங்களின் புனிதத் தன்மை கேள்விக்குறியாகிறது. இங்கு திருமணங்கள் நீடிப்பது, ஒருவருக்கொருவர் அனுசரித்துப்போவது, தனிநபர் விருப்பமேயன்றி குடும்ப கௌரவம், இனசனத்தின் தலையீடு சம்பந்தமானதல்ல.**

இப்படி மாறித் திருமணம் செய்து கொள்பவர்களின் எதிர்காலம் ஒன்றின் ஆதிக்கம் இன்றி இரண்டு பண்பாடுகளுக்கும் இடைப்பட்ட ஒரு நிலையைக் கொண்டதாக இருப்பது எல்லா நேரங்களிலும் சாத்தியப்படக்கூடுமா?உலகமயமாக்கலில் கலப்புத் திருமணம், காதல், என்று வரும்போது பழைய சம்பிரதாயபூர்வமான திருமணங்களின் புனிதத் தன்மை கேள்விக்குறியாகிறது. இங்கு திருமணங்கள் நீடிப்பது, ஒருவருக்கொருவர் அனுசரித்துப் போவது, தனிநபர் விருப்பமேயன்றி குடும்ப கௌரவம், இனசனத்தின் தலையீடு சம்பந்தமானதல்ல. அப்படி அவை சம்பந்தப்படுமாயின் அது சமூகத்தின் தனிப்பட்டவர்களின் கலாசார இடைமாறுதல் (transition ) காரணமானது.

Danielle Teutschஎன்பவர் எழுதிய “exotic look of the future‘ என்கிற கட்டுரையில் ‘21ம் நூற்றாண்டின் அழகைத் தேடும் முடிவற்ற தேடு





தலில், எவ்வளவுக்கு எவ்வளவு இனக்கலப்பு ஏற்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு தோற்றம் அழகு பெறும் என்ற கருத்துப்போக்கு பிரபல்யம் பெற்றுவருகிறது' என்கிறார். கலப்பினால் அழகு வரும் என்பதே தற்போதைய நியதி. இனக்கலப்பினால் பிறந்தவர்களையே வர்த்தகத் துறையும் fashion துறையும் நாடுகிறது.

ஒரு நிறுவனம்தாம் விளம்பரப்படுத்தும் பொருள் முழு உலகுடனும் தொடர்புடையதாக இருக்கவேண்டுமாயின் இவ்வாறு இனக்கலப்பினால் பிறந்த பெண்களையும் ஆண்களையும் தம் விளம்பரங்களுக்கு மொடல்களாக பயன்படுத்த விரும்புகின்றனராம். சாதியை, மதங்களை ஒழிக்க வேண்டும் என யாரும் கலப்புத் திருமணங்களைச் செய்துகொள்வதில்லை. இருவர் ஒருவருக்கொருவர் விரும்பினால் திருமணம் செய்துகொள்கின்றனர். ஆயினும் மதமாற்றம் என்பது ஒரு சமூகத்தின் எதிர்க் குரலாக அமைவதால் காலப்போக்கில் சில புதிய பிரச்சினைகளுக்கு அது வழிகோலும்.

**உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு உயிரினதும் முதன்மையானதும் உயரியதுமான பிறப்புக்கடமை தங்களது வாழ்க்கைக் காலத்தினுள் வளமான வழித்தோன்றல் ஒன்றையேனும் உருவாக்குதல் என்பதே. விலங்குகளில் சொந்த பந்தம் என்கிற சூட்சுமங்கள் கடந்து உயிர் உற்பத்த இயல்பாகவே இடம்பெறுகிறது. ஆனால் மனித உற்பத்தி மட்டும் அற்ப ஆசைகளால் வளமற்ற முழுங்கிய சந்ததிகளையும் உருவாக்கும் போக்கைக் கொண்டிருக்கிறது.**

மதம் மாறிய திருமணங்கள்குறைந்தது மூன்று தலைமுறைகளின் சந்தோஷங்களையாவது காவு கேட்கும் என்று ஒருகாலம்வரையில் கூறப்பட்டுவந்தது. இன்றும் பல இடங்களில் கூறப்படுகிறது. ஆனால் பல்லினச் சமூகத்தில் வாழப்போகும் நம்முடைய அடுத்த சந்ததியினருக்கு இனம் என்பது ஒரு முக்கிய பிரச்சினையாக இருக்கப்போவதில்லை. ஒவ்வொருவரையும் தனித்தனி சமூகங்களாகப் பார்க்கும் மரபு ரீதியான பார்வை இனி காலத்திற்கு ஒவ்வாததாக மாறக்கூடும் எனக் கூறப்படுகிறது.

இணையத்தில் நான் வாசித்த ஓர் விடயம்தனை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதாவது உலகில் மனித இனம் தோன்றியபோது முதன்முதலாக இருந்தவர்கள் நான்கு இனங்கள் மட்டுமே. இன்று இந்தியாவில் மட்டும் ஏறத்தாழ 72 மரபினக் கூறுகள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றனவாம். நான்காக இருந்த இனங்கள் எழுபத்தியிரண்டுக்கும் மேற்பட்ட துணை இனங்களாகப் பெருகியது எப்படி? இனக்கலப்பினால் மட்டுமே இது சாத்தியமாகிறது. எனவே இரண்டு இனங்களின் மரபணுக்கள் கலக்கும்போது முற்றிலும் புதிய மரபணு உண்டாகி அது பரிணாம வளர்ச்சியில் அறிவாற்றலில் அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்கிறது.

புதிய புதிய சிந்தனைகளை உருவாக்குகின்றன. இவ்வாறு வளர்ந்த மனித இனம் தேங்கி நிற்பதற்கு 'அகமண முறை' காரணமாக இருக்கிறதாம். அகமண முறை இல்லாத மேற்கத்தைய நாடுகளின் அறிவாற்றல் அறிவியல் வளர்ச்சியுடன் அகமண முறைக்குள் முடங்கி நிற்கும் கீழைத்தேய நாடுகளின் அறிவாற்றல் அறிவியல் வளர்ச்சியை ஒப்பிடுகையில் அகமண முறை எந்த அளவுக்கு நம்முடைய நாடுகளின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது என்பது கண்கூடு.மரபியல்பின்படி இரண்டு வேற்றுமையுள்ள மரபணுக்கள் இணையும் போது வீரியத்தன்மை(Hybrid) பெறுகிறது என்பது மெண்டலியன் (Mendalian) கோட்பாடு.

உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு உயிரினதும் முதன்மையானதும் உயரியதுமான பிறப்புக்கடமை தங்களது வாழ்க்கைக் காலத்தினுள் வளமான வழித்தோன்றல் ஒன்றையேனும் உருவாக்குதல் என்பதே. விலங்குகளில் சொந்த பந்தம் என்கிற சூட்சுமங்கள் கடந்து உயிர் உற்பத்தி இயல்பாகவே இடம்பெறுகிறது. ஆனால் மனித உற்பத்தி மட்டும் அற்ப ஆசைகளால் வளமற்ற முழுங்கிய சந்ததிகளையும் உருவாக்கும் போக்கைக் கொண்டிருக்கிறது.

இப்போக்கானது நாளடைவில்இயற்கையான நோய்களைக்கூட எதிர்க்க முடியாததும் புத்திக் கூர்மையற்ற பரம்பரையையுமே பிரசவிக்கும். நீண்டகால நோக்கில் நலிவடைந்த சமூகத்தை உருவாக்கி மனிதனின் இருப்பையே கேள்விக்குறியாக்கி விடுகிறதாம். இணைகின்ற இரு மனங்களும் உள்ளத்தால் ஒத்தமைவதோடு பரம்பரை அலகு பல்வகைமையும் கொண்டமைந்தால் வளமான வழித்தோன்றல்களுக்கும் இல்லையெனில் வளமற்ற எச்சங்களுக்குமே வழிகோலும்.





நிலாதமிழ்

# தாயுமானவள்

'அண்ணா...அப்பாட்டைப் போப்போறேன்.. அம்மாட்டைப் போப்போறன்'... என்று உடலில் சத்திர சிகிச்சைக்காக ஏற்றப்பட்டு பின்னர் வலுவிழந்து கொண்டிருக்கும் அனஸ்தீசியா மருந்தின் தாக்கத்தினால் அரைகுறை மயக்கத்தில் புசத்திக் கொண்டிருந்தாள் அகல்.

அகலுக்கு கனவுலகில் எங்கோ வெண் பஞ்சுக் கூட்டத்தின் நடுவே தேவதூதர்களுடன் பறப்பது போலிருந்தது...அவளுக்குத் தேவதூதர்களாக மலர்ந்த முகத்துடனும் கனிந்த பார்வையுடனும் கண் முன்னே தென்படும் எல்லா மருத்துவப் போராளிகளும் தோன்றினார்கள். அருகிலே கலங்கல் உருவமாகத் தெரிந்த stethoscope ஐ கழுத்தில் மாலையாக அணிந்தவாறு blood pressure ஐயும் pulse ஐயும் check பண்ணிக் கொண்டிருந்த போராளி வைத்தியரான இனியன் டொக்டரைப் பார்த்துத் தான் அகல் அனஸ்தீசியா மருத்தின் தாக்கத்தினால் கையைக் காலையடித்து திமிறிக் கொண்டு இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தாள்.

அவனும் சகோதர பாசத்துடனும் தாயைப் போன்ற பரிவுடனும் அவளது தலையைத் தடவியவாறு,

'ஓமம்மா அம்மா அப்பாட்டை போகலாம்...பிள்ளைக்கு காயம் எல்லாம் மாறினவுடன எல்லோரையும் பார்க்கப் போகலாம்'

என்று கூறிச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்...அரைகுறை மயக்க நிலையில் அகலின் ஆழ் மனதில் இருந்த ஆசைகள் எல்லாம் கேள்விக் கணைகளாக இனியன் டொக்டரை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தன. அவனும் அலுக்காமல் சலிக்காமல் அவளது எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளித்தவாறு இருந்தான்.

அழகிய பூவொன்று வாடினாற் போலிருந்த அவளது முகத்தைப் பார்க்க அவனுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. போர் முன்னரங்கப் பகுதி ஒன்றில் களமருத்துவப் பணியில் ஈடுப்பட்டுக் கொண்டிருந்த போது இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியின் தாக்குதலில் பி.கே இன ஆயுத ரவை ஒன்று அவளது இடுப்பு பகுதிக்குள்ளால் நுழைந்து நெஞ்சுப் பகுதியால் வெளியேறி இருந்தது. இதனால் அவளது சிறு குடலில் பாதிப்பு ஏற்பட்டதனால் அதனின் ஒரு பகுதி அகற்றப்பட்டிருந்தது.

இனியன் டொக்டரின் நினைவுகள் பின்னோக்கி நகர்ந்தன... அவனுக்கு அகலைச் சிறுவயது முதலே தெரியும். அவனின் சித்தியின் பக்கத்து வீட்டில் தான் அவள் வீடு இருந்தது. அவனின் சித்தியின் மகள் மதுவின் சிறு வயதுத் தோழியும் பாடசாலை நண்பியும் தான் அவள். யாழ்ப்பாணம் திண்ணைவேலியில் பல்கலைக்கழகத்திற்கு அருகில் தான் அவர்களது வீடு அமைந்திருந்தது. அவன் அமைப்பில் போராளியாக இணைய முதல் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தில் இரண்டு ஆண்டுகள் கல்விகற்ற காலத்தில் சித்தி வீட்டில் தான் தங்கி நின்று கல்வி கற்றான். அப்போதுதான் அகல் அவனுக்கு அறிமுகம் ஆனாள்.

அப்போது அவளுக்கு பன்னிரண்டு வயதிருக்கும். அவனின் சித்தியின் மகளும் அவளும் ஆண்டு ஐந்து புலமைப்பரிசுப் பரீட்சையில் அதிஉயர் புள்ளிகள் பெற்று யாழ்நகரில் பிரபல்யமான பெண்கள் பாடசாலை ஒன்றில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்கள். அகலின் அப்பா யாழ் நகரின் பிரபல பாடசாலை ஒன்றின் அதிபர். அம்மா வங்கி ஒன்றின் தலைமை அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அம்மா, அப்பா, அவளைவிட இரண்டு வயது குறைந்த தம்பி என அழகிய அவளது சிறு குடும்பம் இருந்தது.

நல்ல சிவந்த நிறமும் கருந்திராட்சை போன்ற துரு துரு விழிகளும் செப்பு வாயும் சுருட்டை முடியும் கொழு கொழு கன்னங்களுமாக பார்ப்பவர்களைக் கவர்ந்திழுக்கக் கூடிய சிறுமியாக அவள் தோற்றம் அமைந்திருந்தது. படிப்பிலும் விளையாட்டிலும் வலு கெட்டிக்காரி. மதுவுடன் விளையாட வரும்போது இனியனுடனும் அண்ணா... அண்ணா என்று மிகவும் அன்பாக அழைத்துப் பழகுவாள். அவன் படிக்கும் புத்தகங்களை ஆர்வத்துடன் தானும் எடுத்து வாசித்துப்





பார்த்து விட்டு அவற்றினைப்பற்றி எதுவும் நன்றாகப் புரியாத போதும் ‘அண்ணா...நானும் கெட்டிக்காரியாகப் படித்து வளர்ந்ததும் ஒரு டொக்டராக வருவேன்’ என்று அழகிய அவளது கண்களில் கனவு மிதக்கக் கூறுவாள்.

மகிழ்வாகப் போய்க்கொண்டிருந்த அவளது வாழ்க்கையில் அவர்களது குடும்பத்தில் முதலாவதாக ஒரு பேரிழப்பு ஏற்பட்டது. கொழும்பில் அவளது மாமா பிரபல சத்திரசிகிச்சை நிபுணராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் குடும்பத்துடன் தான் கொழும்பில் வைத்தியர்களுக்கான குவாட்டர்சில் அகலின் அம்மம்மா, தாத்தாவும் வசித்து வந்தனர். 1983 ஆம் ஆண்டு கொழும்பு வாழ் தமிழ் மக்கள் மீது சிங்களக் காடையரினால் கட்டவிழ்த்து விடப்பட்ட திட்டமிடப்பட்ட இனவழிப்பில் கொழும்பில் அவளது மாமா பிரபல சத்திர சிகிச்சை நிபுணராக இருந்த போதும் தமிழர்கள் என்ற காரணத்தினால் அவளது மாமா, மாமி மற்றும் அவர்களது இரண்டு வயதுக் குழந்தையும் குவார்டர்சில் வைத்துக் கதறக் கதற வாளால் வெட்டப்பட்டு எரியூட்டிக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

அவளது அம்மம்மா, தாத்தா கொழும்பில் அவர்கள் இடத்திலிருந்து சிறிது தள்ளி வேறு ஒரு இடத்தில் வசித்து வந்த உறவினர் ஒருவரின் திருமண வீட்டிற்குச் சென்றபடியால் அந்தச் சம்பவத்தில் இருந்து தப்பியிருந்தனர். பின்னர் அந்த உறவினர் குடும்பத்துடன் சேர்ந்து அவளது அம்மம்மாவும், தாத்தாவும் உடுத்த உடையுடன் மாற்றுடை இல்லாது வவுனியா காட்டுப்பகுதியினூடாக நடையில் பல சிரமங்களுக்கு மத்தியில் தப்பி யாழ்ப்பாணம் வந்து அவளது குடும்பத்துடன் தங்கியிருந்தனர். அம்மம்மா, தாத்தாவிடமிருந்து ஆடிக் கலவரம் தொடர்பான செய்திகளை தூண்டித் துருவி அறிந்த அகலின் மனதில் அப்போதே இலங்கை அரசின் மீது ஆழமான ஒரு வெறுப்பு ஏற்பட்டிருந்து. அம்மம்மா, தாத்தாவிடம் அறிந்த ஆடிக் கலவரம் தொடர்பான செய்திகளை இனியவனுடனும் பகிர்ந்து ‘ஏன் அண்ணா சிங்களவர்கள் இப்படித் தமிழ் மக்களுக்குச் செய்யினம்’ என்று கவலையுடன் கேட்பாள். இனியவன் அந்தச் சிறுமிக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தடுமாறுவான்.

பின்னர் காலவோட்ட மாற்றத்தில் காலத்தின் தேவை அறிந்து இனியவனும் தனது படிப்பை இடைநிறுத்தி விட்டு போராளியாக மாறி மருத்துவப் போராளியாக கடைமையாற்றிக் கொண்டிருந்தான்.

தமிழீழ மருத்துவப் பிரிவின் மருத்துவக் கல்லூரியில் புதிதாக உருவாக்கப்பட்ட அணி ஒன்றிற்கான மருத்துவப் போராளிகளுக்கு வகுப்பு எடுப்பதற்காக இனியவன் ஒரு முகாமுக்குச் சென்றிருந்த போது ‘ரமணன் அண்ணா’ என்று இனியவனின் சொந்தப் பெயரைச் சொல்லி அழைக்கும் ஒரு பெண்ணின் குரல் பின்னாலிருந்து கேட்டது. திருப்பிப் பார்த்தால் மடித்துக் கட்டிய இரட்டைப் பின்னலுடன் வெள்ளை நிற சேட்டும் கறுப்புநிற ஜீன்சும் இடுப்பில் கறுப்புப் பட்டியும் அணிந்தபடி மெல்லிய வெள்ளைநிறத் தோற்றத்துடன் அழகிய பெண் போராளி ஒருத்தி சிரித்த வண்ணம் நின்றிருந்தாள். இனியனுக்கு அவளைக் கண்டதும் முகம் எங்கோ கண்ட மாதிரி நினைவு வந்தது. யாரிது என்று அவர் யோசித்துக் கொண்டிருக்கும் போது ‘ரமணன் அண்ணா... என்னைத் தெரியவில்லையா...? நான் தான் மதுவின் பிரண்ட் ஜானு. இப்ப என்ர பெயர் ‘அகல்’ என்றாள் சிரித்தபடி...

இனியவனுக்கு அவளைப் பார்க்க வியப்பாக இருந்தது. கடைசியாக 12 வயதுச் சிறுமியாகக் கண்ட ‘ஜானுவை’ இப்ப 20 வயது அழகிய இளம் பெண்போராளியான ‘அகல்’ ஆகக் காணுகின்றான். அவளது தோற்றத்தில் முந்தி இருந்த குழந்தைத்தனம் மாறி இப்ப ஒரு ‘போராளிக்குரிய உறுதியும் வீரமும் மிடுக்கும்’ காணப்பட்டது. எனினும் கண்களில் ஏதோ ஒரு சோகம் இழையோடியிருந்ததை இனியவன் இனங்கண்டு கொண்டான்.

இனியவன் மேற்படிப்புக்காக மேற்கத்தைய நாடு ஒன்றிற்கு அமைப்பினால் அனுப்பப்பட்டு ஐந்து ஆண்டுகள் கற்கைநெறி நிறைவடைந்தவுடன் ஒரு சத்திர சிகிச்சை நிபுணருக்கான தகுதிச் சான்றிதழுடன் தாயகம் திரும்பி வன்னிப் பகுதியில் மக்களுக்கும் போராளிகளுக்கான முழுமையான மருத்துவப் பணியில் ஈடுப்பட்டுக் கொண்டிருந்தான். இதனால் அவனுக்கு தனது சித்தி குடும்பம், ஜானு பற்றிய விபரங்கள் தெரியாதிருந்தது.

அகலுடன் தொடர்ந்து கதைத்துக் கொண்டு போகும்போது தான் சித்தி குடும்பம், அவளது குடும்பம் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொண்டான் இனியவன். இடிமேல் இடியாக அகலின் குடும்பத்திற்கு அடுத்த இரண்டாவது இழப்பும் ஏற்பட்டிருந்தது. இலங்கை இராணுவத்தின் விமானத்தாக்குதலின் குண்டு வீச்சில் அவளது சிறிய தம்பியையும் அவள் இழந்திருந்தாள். இனியவனுக்குத் தெரியும் அகல் தனது தம்பி மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தாள் என்பது. தம்பியின் இழப்பு பற்றி அவள் கூறும் போது கண்கள் சிறிது கலங்கினாலும் போராளிக்குரிய மனவுரத்துடன் கவலையை மறைத்து அவள் காட்டிய முகமாற்றத்தை பார்த்த இனியவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவளது தம்பியின் இழப்புக்குப் பின்னர் அவளது அம்மா, அப்பா, அம்மம்மா, தாத்தா எல்லோருக்கும் எல்லாமுமாக அவள் தான் இருந்திருக்கிறாள். க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் அவ்வளவு இழப்புகள் போர்ச்சூழலுக்கு மத்தியிலும் மனவுறுதியுடன் கற்று மிகச்சிறந்த அதிபெறுபேற்றைப் பெற்று க.பொ.த உயர்தரத்தில் உயிரியல்துறையில் எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வரவேண்டும் என்ற கனவுடன் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருந்தாள். ஆனால் நாட்டின் போர்ச்சூழல் அவளைத் தொடர்ந்து கல்வி கற்க விடவில்லை. இராணுவத்தின் நிலப்பறிப்புகள், விமானக் குண்டு வீச்சுகள் , எறிகணை வீச்சுகள் இதனால் தொடர் இடப்பெயர்வுகள் எனத் தொடர்ந்த இராணுவ அட்டூழியங்களினால் காலத்தின் தேவை கருதி தன்னையும் போராளியாக இணைத்துக் கொண்டாள். அவள் உயர்தரத்தில் உயிரியல் பிரிவில் கல்வி கற்றபடியினால் மருத்துப்பிரிவிற்குத் தெரிவு செய்யப்பட்டாள்.

அவளின் மிகச்சிறந்த க.பொ.த சாதாரண தரப் பெறுபேற்றின் அடிப்படையில் தமிழீழ மருத்துப் பிரிவில் போராளி மருத்துவர்களுக்கான மருத்துவக் கல்லூரியில் கல்வி கற்க நியமிக்கப்பட்டிருந்தாள். அங்கே போராளி மருத்துவ மாணவர்களுக்கான விரிவுரையாளராக இனியவன் வந்திருந்த போதே அகலை அவன் சந்தித்தான். அந்த மருத்துக் கல்லூரியில் அகல் தான் சிறிய வயதுப் போராளி.

ஆனாலும் அறிவில் முதிர்ந்த மற்றைய மருத்துவப் போராளிகளுக்கு நிகராக மிகவும் ஆர்வத்துடன் கற்கைநெறியைத் தொடர்ந்தாள். அங்கே மருத்துவப் போராளிகள் கற்கைநெறியையும் மேற்கொள்ளும் நேரத்தில் தேவைப்பட்டால் களமருத்துவப் பணிகள், காயப்பட்ட போராளிகளைப் பராமரித்தல், வைத்திய சத்திர சிகிச்சை நிபுணர்களுடன் இணைந்து காயப்பட்டு வரும் போராளிகளுக்கான சத்திர சிகிச்சைகளில் உதவியாகச் செயற்படுதல் போன்ற பணிகளையும் மேற்கொள்ளுவார்கள். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மருத்தவப் போராளிகளின் பங்களிப்பானது தலையாயதும் காத்திரமானதுமாகும். களத்திலே காயப்பட்டு வரும் போராளிகளுக்கு அவர்களே அம்மாவாகவும் அப்பாவாகவும் அனைத்துமாகவும் இருந்து களத்திலும் சரி மருத்துவ முகாம்களிலும் சரி தங்களது பணிகளைச் செவ்வனே

மேற்கொள்ளுவார்கள். தங்கள் தூக்கத்தை பசியை ஒறுத்து ஒரு தாய் தனது குழந்தைகளை எவ்வாறு பராமரிப்பாளோ அவ்வாறே காயப்பட்டு வரும் போராளிகளை அன்புடன் அரவணைத்து ஆறுதல் கூறி குளிப் பாட்டி உணவூட்டி உடைமாற்றி எந்த அருவருப்போ முகச்சுளிப்போ அற்று எந்நேரமும் இன்முகத்துடன் கடமையாற்றுவார்கள்.

அவ்வாறே மருத்துவ முகாமிலே அகலும் அனைவருக்கும் தாயு மானவளாக விளங்கினாள். பாரிய விழுப்புண்களுக்கு உள்ளான போராளிகளுக்கு venflon மூலம் அடிக்கடி (injection) ஊசி மருந்து ஏற்றும் போது கை வீங்கி injection ஏற்ற முடியாதவாறு கடும் வேதனையாக இருக்கும். அதனால் மருத்துவப் போராளிகள் injection போட வரும்போது காயப்பட்ட போராளிகள் வலிவேதனை யில் கத்தியவாறு போட மறுப்பதுண்டு. ஆனால் அகல் injection போட வந்தால் அவர்கள் அமைதியாகப் போட விடுவார்கள். அவர்களுக்கு வலி தெரியாதவாறு நகைச்சுவைக் கதைகள் கூறி மென்மையாக பக்குவமாகச் சிரித்தபடியே injection ஐ ஏற்றிவிடுவாள் அவள். அத னால் காயப்பட்ட போராளிகள் எல்லோரும் 'அகல் டொக்டர் வந்தால் தான் injection போடுவேன் என்று அடம் பிடிப்பதுண்டு. அதைவிட வலிவேதனைகளால் சாப்பிட மறுத்து அடம் பிடிக்கும் போராளிக ளையும் அன்பாக கதைத்து மிரட்டி தனது குழந்தைகளுக்குத் தாய் உணவூட்டுவது போன்ற பரிவுடனும் பக்குவத்துடனும் ஊட்டி விடு வாள். அவர்களும் அவளது அன்பான அணுகுதலைக் கண்டு எதிர்ப்புக் காட்டாமல் உண்ணுவார்கள்.

மருத்துவப் போராளியாக இருந்த போதும் அகலின் மனதிலும் எல் லாப் போராளிகளைப் போலவும் தானும் சண்டைக் களத்திற்குச் செல்ல வேண்டும் என்ற அவா நீண்ட காலமாகக் குடிகொண்டிருந்தது. தனது பொறுப்பாளரிடம் அடிக்கடி 'என்னை ஒரு தடவை என்றாலும் சண்டைக்கு விடுங்கோ அக்கா' என்று நச்சரிப்பாள். மருத்துவத்துறை யில் கற்று நன்றாகத் தேர்ச்சியடைந்த போராளியான அவளைச் சண் டைக்கு விட்டு இழந்தால் அவளை மாதிரி இன்னொரு மருத்துவப் போராளியை கற்பித்து பயிற்றுவித்து உருவாக்குவது கடினம் என்ற படியால் அவளது பொறுப்பாளர்

'இயக்கம் சொன்னதைத் தான் நீர் செய்ய வேண்டும்...நீர் சொன் னதை இயக்கம் செய்ய வேண்டும் என்று எதிர் பார்க்கக் கூடாது... இயக்கத்திற்கு எங்க எங்க யார் யாரை எப்போது எந்த நேரத்தில விட வேண்டும் எண்டு தெரியும்...அதுவரை இயக்கம் தந்த உம்மட வேலை யைப் பாரும் என்று அகலின் கோரிக்கையைத் தட்டிக் கழித்தவாறே வந்தார். ஆனால் அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற மாதிரி அகலின் தொடர் நச்சரிப்பால் அவளின் கோரிக்கையை ஏற்றுச் சிறிது காலம் போர் முன்னரங்குகளில் களமருத்துவப் பணியை மேற் கொள்ள அனுமதித்தார்.

அவளும் பெருமகிழ்வுடன் தன் கோரிக்கை நிறைவேறிய மகிழ்வு டன் தனது மருத்துவ முகாம் போராளிகளிடமிருந்து தற்காலிகமாக





விடை பெற்றாள். காயப்பட்டு மருத்துவ சிகிச்சைக்காக வந்திருந்த போராளிகளுக்கே தாயைப் போன்று பரிவு காட்டிய அவளது பிரிவு மிகவும் தாங்க முடியாதிருந்தது. ஆனால் போராளிகள் என்றால் வலியும் பிரிவும் இழப்பும் சாதாரணம் தானே. அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டு கண்ணீருடன் அவளுக்கு விடை கொடுத்தார்கள். படையணிப் போராளிகளுடன் இணைந்து கடுமையான போர்ப் பயிற் சியினை எடுத்து நிறைவு செய்ததும் அவளும் போர் முன்னரங்கப்ப குதிக்கு அனுப்பப்பட்டாள்.

களத்திலேயும் அகலின் பணி காத்திரமானதாக அமைந்தது. பச்சை நிறச் சீருடையில் மிகப்பெரிய மருத்துவ உபகரணங்கள் அடங்கிய பையை முதுகிலும் நெஞ்சில் கோல்சரும் குறுக்கே துப்பாக்கியையும் கொழுவியபடி வோக்கி டோக்கியையும் கையில் வைத்துக் கொண்டு மிடுக்கான நடையுடன் இன்முகத்துடனும் நேர் கொண்ட பார்வையு டனும் போர் முன்னரங்கப் பகுதிகளில் காவலரண்களுக்கு அவள் சென்று வரும் போது பாரதி கண்ட புதுமைப் பெண்ணை நேரே கண்ட மாதிரி பார்ப்பவர்களுக்குத் தோன்றும். இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதல்கள், எறிகணை வீச்சுகள், கிளைமோர் தாக்குதல்கள், கண் ணிவெடிகள், ஆழ ஊடுருவும் அணியினரின் தாக்குதல்கள் அனைத் திற்குள்ளாலும் தன்னுயிரையும் பொருட்படுத்தாது முன்னரங்குகளில் நிற்கும் போராளிகளுக்கு தேவைப்படும் மருத்துவ சிகிச்சைகளை வழங்கச் சென்று வருவாள்.

அப்படித்தான் ஓர்நாள். போர் முன்னரங்கிலே நிற்கும் ஒரு போரா ளிக்கு கடும் காய்ச்சல் அடிக்க மெயினில் நின்ற அவளுக்கு வோக்கி டோக்கியில் அழைப்பு வந்தது. அகலும் அவளது உதவியாளரான இன் னொரு பெண் போராளியும் போர் முன்னரங்கப் பகுதிக்கு விரைந்து சென்றனர். ஏற்கனவே அந்தப் பகுதியில் இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினரின் நடமாட்டம் அதிகமாக உள்ளது என அறி வுறுத்தல் வந்திருந்தது. மெயினில் நின்ற பொறுப்பாளர் அகலுக்கும் அவளுக்கு உதவியாகச் சென்ற மற்றைய போராளிக்கும் பாதுகாப்பா கச் சென்று வரக் கூறி ஏதும் உதவி தேவைப்பட்டால் உடனே வோக்கி டோக்கியில் அறிவிக்கும்படியும் உடனே தயாராக நிற்கும் முறியடிப்பு அணியைத் தாம் அனுப்புவதாகவும் சொல்லி அனுப்பினார்.

காய்ச்சல் வந்த போராளிக்கு தேவையான மருத்துவ சிகிச்சைய ளித்து விட்டு அகலும் அவளது உதவியாளரும் மெயினை நோக்கித் திருப்பிச் சென்றுகொண்டிருந்தனர். வரும் போது பொறுப்பாளரினால் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்ததனால் இருவரும் சுற்று முற்றும் அவ தானமாகப் பார்த்துக் கொண்டு நகர்ந்து கொண்டிருந்தனர். அகலுக்கு வரும் போது இல்லாத ஏதோவொரு வித்தியாசம் தென்பட்டது. அதனைத் தனது உதவியாளராக வந்த போராளியிடம்.

கயல் எனக்கு வரும் போது இருந்ததை விட இப்போது ஏதோ ஒரு வித்தியாசம் தெரிகிறது என்று கூறினாள். அவளும் 'ஓம் அக்கா

எனக்கும் வித்தியாசம் தெரிகிறது என்றாள். ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கப் போகின்றது என்று அகலின் உள் மனம் உணர்த்தியது.

அவர்கள் சென்று கொண்டிருந்த பாதையிலிருந்து அண்ணளவாக 200ட் தூரத்தில் திடீரென்று ஆட்காட்டிக் குருவிகள் கீச்சிட்டவாறு சிறகடித்துப் பறந்தன. உடனே அகலும் மற்றைய போராளியும் எச்சரிக்கையாகி அருகில் நின்ற மரத்திற்குப் பின்னால் காப்பெடுத்த வாறு நிலமையினை அவதானித்தனர். சிறிது தூரத்தில் இலைகுழை களால் உருமறைப்புச் செய்த தொப்பியணிந்த ஆறேழு இராணுவத் தினரின் தலைகள் தென்பட்டன. அகல் தனது துப்பாக்கியைத் தயார் நிலையில் வைத்தபடி கயலுக்கும் துப்பாக்கியைத் தயார் நிலையில் வைக்கும்படி கூறிவிட்டு உடனே வோக்கியில் மெயினிலுள்ள பொறுப்பாளருக்கு அருகில் உள்ள இராணுவத்தினருக்கு கேட்காத வகையில் நிலமையைத் தெரியப்படுத்தினாள். அவரும் அவர்கள் நிற்கும் இடத்தை தெளிவாகக் கேட்டு விட்டு இயன்றவரை சண்டை யைத் தவிர்த்து தமது உதவி முறியடிப்பு அணி வரும்வரை பாதுகாப்பாக இருக்கும்படி அறிவுறுத்தினார்.

அகலும் 'சரியக்கா அப்படியே செய்கிறோம்' என்று கூறிவிட்டுத் திரும்பும் போது அகலின் அசைவினை ஒரு ஆழ ஊடுருவும் இராணு வத்தினன் அவதானித்து விட்டு அவளை நோக்கிச் சுடத் தொடங்கி விட்டான்.

மிகவும் பாரமான மருத்துவப் பையினைத் தோளில் சுமந்தவாறு அகலும் மற்றைய போராளியான கயலும் மரங்களுக்கிடையே காப் பெடுத்தவாறு காப்புச்சூட்டை வழங்கிய வண்ணம் நகர்ந்து கொண் டிருந்தார்கள். இராணுவ அணியிலோ ஏழு பேர் இருந்தார்கள். ஆனால் இங்கு அகலும் கயலும் மட்டும் தான். ஆனால் இருவருக்கும் எடுத்த கடும் பயிற்சி கைகொடுத்தது. இருவரும் மனவுறுதியுடனும் ஓர்மத் துடனும் பதில் தாக்குதலை வழங்கிக் கொண்டிருந்தனர். இதற்கி டையில் உதவி முறியடிப்புத் தாக்குலணியினரின் லீடர் அகலுடன் வோக்கியில் தொடர்பு கொண்டு தங்கள் அணி அருகில் வந்து விட்டது மனம் தளராது இருக்கும்படி தெரிவித்தார்.

மருத்துவப் பையுடன் மரத்துக்குப் பின்னே காப்பெடுத்து நின்று கொண்டிருந்த அகலினை இராணுவத்தினரின் பி.கே இன ரவை ஒன்று இடுப்பைத் துளைத்தவாறு உள்ளே புகுந்து நெஞ்சு வழியாக வெளி வந்தது.. இரத்தம் பெருக்கெடுத்தோட கீழே விழுந்தாள் அகல். அருகே இன்னொரு மரத்துக்குப் பின்னால் காப்பெடுத்து நின்றிருந்த கயல் இதனை அவதானித்து ஓடி வந்து அகலின் காயங்களுக்கு இரத்தம் வெளியேறாதவாறு 'பீல் கொம்பிரஸ்' ஐ வைத்துக் கட்டி னாள். இவர்கள் நின்ற இடத்தைக் குறிவைத்தபடி மூன்று இராணு






வத்தினர் சுட்டவாறு முன்னேறி வந்து கொண்டிருந்தனர். இதனை அவதானித்த அகல் 'என்னால முடியாமல் இருக்கு என்னைச் சுட்டு விட்டு நீ தப்பிச் செல்' என்று கயலிடம் மன்றாடிக் கொண்டிருந்தாள். ஆனால் கயல் அதனை ஏற்றுக் கொள்ளாது,

'அகல் அக்கா! இன்னும் கொஞ்ச நேரத்தில எங்கட அணி வந் திடும்....அதுவரை கொஞ்சம் தாக்குப் பிடியுங்கோ...நான் அவங்க ளுக்கு டைவர்ட் காட்டி எதிர்ப்பக்கம் ஓடுறன்...எப்படியாவது நீங்கள் தப்பிச் செல்லுங்கோ அக்கா...உங்கட சேவை இயக்கத்துக்கு முக்கியம் தேவை..உங்களால் நிறையப் போராளிகளையும் மக்களையும் காப் பாற்ற முடியும்... இயக்கம் உங்களை எவ்வளவு செலவளித்து படிப்பித் தது ...அதற்கு பிரயோசனம் இருக்கோணும் என்று கூறியவாறு அகல் மறிக்க மறிக்க இராணுவத்தினரை நோக்கிச் சுட்டவாறு முன்னேறிச் சென்றாள். மூன்று இராணுவத்தினரின் கவனமும் கயலை நோக்கித் திரும்பியது. கயலின் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகி ஒரு இராணு வத்தினன் வீழ்ந்தான். மற்ற இரண்டு இராணுவத்தினரின் ரவைகளும் கயலின் உடலைத் துளைத்துச் செல்ல கயலின் உடல் அவள் நேசித்த மண்ணில் வீழ்ந்தது. அவளின் இரத்தத்தால் அந்தமண் சிவந்தது. இப்படித் தான் எத்தனையோ போராளிகள் தன்னலம் கருதாது நாட்டினரும் இயக்கத்தினதும் தேவையை உணர்ந்து தம்முயிரை ஈய்ந்துள்ளனர்.

பின்னர் போராளிகளின் உதவி முறியடிப்பு அணி அந்த இடத் தினை வந்தடைந்திருந்தது. அவர்கள் இராணுவ ஆழ ஊடுருவும் அணிக்கு எதிரான தாக்குதலை நடாத்தி மிகுதி இராணுவத்தினரையும் கொன்றொழித்து அவர்களின் ஆயுதங்களையும் கைப்பற்றி காயப்பட்ட அகலையும் பின்னகர்த்தினர். அதன் பிறகு மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ முகாமுக்கு அனுப்பப்பட்ட போதுதான் அங்கு இனியன் அகலைக் கண்டான்.

மருத்துவப் போராளிகளின் சிறந்த மருத்துவ சிகிச்சையும் பராம ரிப்பும் அவளின் மனவுறுதியும் சேர்ந்து அகலின் காயங்களை வெகு விரைவில் குணமடையச் செய்தது. பின்னர் தன்னைக் காப்பாற்றிய கயலின் அகலா நினைவையும் கனவையும் நெஞ்சில் சுமந்தவாறு தனது கற்கை நெறியைத் தொடர்ந்து நிறைவு செய்து ஒரு முழுமை யான போராளி வைத்தியராகத் திரும்பவும் கழுத்தில் மாலையாக ரெதஸ்கோப் அணிந்தவாறு இன்முகத்துடன் போராளிகளுக்கும் மக்க ளுக்குமான தாயகத்தின் தாயுமானவளாக அகல் தனது விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றாள்.

**யாவும் கற்பனை அல்ல...**



# பெண்ணே!!

*சிறகு முளைத்த பறவையாய்*
*விண்ணில் பறக்க ஆசைப்படு.!*
*காற்றில் மிதக்கும் இறகாய்*
*உன் புன்னகையை மிதக்க விடு!!*

*பட்டுப் பூச்சியாய்*
*இருந்து விடாதே!*
*பட்டாம்பூச்சியாய்*
*பறந்து விடும்!*
*நீ.*
*கள்ளிப் பாலுக்கு தப்பித்தவள்!!*
*சருகாய் விழாமல்*
*சிறகை விரி.*
*சிகரம் நோக்கி!!*

*'மகளிர் தின வாழ்த்துகள்'*

**முல்லை பாஸ்கர்**

**(08/03/23 அன்று சர்வதேச மகளிர் தினத்தையொட்டி எழுதப்பட்டது.)**